தமிழ் வாழ்க

தமிழ்ப்பொழில்

திங்களிதழ்

துணர் : 57 மலர் : 7

கரந்தைத் தமிழ்ச் சங்கம்

தொண்டு தமிழ் முன்னேற்றம்

கரந்தைத் தமிழ்ச் சங்க வெளியீடு

RECEIVED 4 ... GOVT. ORIENTAL ... MADRAS

திருவள்ளுவர் ஆண்டு: 2014—உருத்ரோத்காரி
(1983 அக்டோபர் — நவம்பர்) ஐப்பசி

பொழிற்றொண்டர் :
ச. பாலசுந்தரம்

தமிழ்ப் பொழில்

துணர் : 57 | உள்ளுறை | மலர் : 7

1. **புரட்சிக்கதைஞர் புதுமைப்பித்தனின் தாக்கம்** 289
கோ. தெய்வ நாயகம், எம். ஏ.,

2. **குல மகளிரா, விலை மகளிரா? அல்லது கற்பனை மகளிரா?** 294
சி. வி. சவரிமுத்து,
20, அருளானந்தம்மாள் நகர், தஞ்சாவூர்.

3. **ஆங்கிலேயரும் தஞ்சை மராட்டியரும்** 297
செல்வி சுந்தர செல்வம், எம். ஏ.,
மகளிர் கல்லூரி, தஞ்சை.

4. **வானொலி நிலையங்களும், செய்தித்தாள்களும் தமிழுக்குச் செய்யும் தொண்டுகள்** 303
திருத்துறைக்கிழார்,
3, மறைமலையடிகள் தெரு, சாமியப்பா நகர்,
திருத்துறைப்பூண்டி-614 713.

5. **தமிழில் துணை வினைகள்** 307
வி. ரேணுகாதேவி,
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்.

6. **சங்க நூல்களில் கரந்தை** 322
பி. எல். சாமி, ஐ. ஏ. எஸ்.,

7. **பாவேந்தரின் இளைஞர் இலக்கியம்** 325
டாக்டர் இராம. சுப்பிரமணியன்,
எம். ஏ., எம். லிட்., எஸ்ஸி., பி. எச். டி., பி. எல்.,
7, தீத்தாரப்ப முதலி தெரு, திருவல்லிக்கேணி,
சென்னை-600 005.

தமிழ் வாழ்க!

தமிழ்ப் பொழில்

கரந்தைத் தமிழ்ச்சங்கத் திங்கள் வெளியீடு

துணர் : 57	திருவள்ளுவர் யாண்டு — 2014 உருத்ரோத்காரி — ஐப்பசி 1983 அக்டோபர் — நவம்பர்	மலர் : 7

புரட்சிக்கதைஞர் புதுமைப்பித்தனின் தாக்கம்

கோ. தெய்வநாயகம் எம். ஏ.,

''ஐயா !

நான் செத்ததற்குப் பின்னால்
நிதிகள் திரட்டாதீர்
நினைவை விளிம்புகட்டிக்
கல்லில் வடித்து
வையாதீர் !

புரட்சிக் கதைஞர் புதுமைப்பித்தனின் புரட்சி வேண்டுகோளிது. புரட்சி வானிலே பழமை மேகங்களிடையே மறைக்கப்பட்டும்

மெல்லிய நிலவொளி வீசும். முழுநிலா புதுமைப்பித்தன். அவர் கதைகள் தமிழிலக்கிய வளர்ச்சியில் - 20 ஆம் நூற்றாண்டைப் பொறுத்த வரையில்— ஒரு மைல்கல் எனலாம்.

அவரது நினைவைப், புகழை, புதுமையைக் கல்லில் வடித்து வையாது, சொல்லில் வடித்து வாழ்த்துங்காணுரையிது.

புதுமைக் கதைஞனின் இலக்கணம் இதுதான் எனக்காட்டுவது போல இலங்குவது புதுமைப்பித்தனே. அவருடைய எழுத்துக்கள் துணிவு, தெளிவு, எளிவு, புதுமை, நனவு, கனவு போன்ற அமைவுகளோடு மலைவு என்பதனையும் கொண்டிலங்குகின்றன.

''காஞ்சனை முதலிய பதினான்கு கதைகளுக்குள் துணிந்து பிரவேசிக்க விரும்பும் வாசகர்களுக்கு—தலையெழுத்து அப்படியாகி விட்ட விமரிசிகர்களுக்கு, நம்முடைய கோஷ்டி இது என்று நினைத்துக்கொண்டு கும்மாளிபோட்டுவரும் நண்பர்களுக்கு, முதன் முதலிலேயே எச்சரிக்கை செய்து விடுகிறேன். இவையாவும் கலை உத்தாரத்திற்கென்று கங்கணம் கட்டிக் கொண்டு செய்த சேவை அல்ல. இவையாவும் கதைகள் !

உலகை உய்விக்கும் நோக்கமோ, கலைக்கு எருவிட்டுச்செழிக்கச் செய்யும் நோக்கமோ எனக்கோ, என்கதைகளுக்கோ சற்றும் கிடையாது. நான் கேட்டது, கண்டது, கனவு, நனவு, காண விரும்பியது, காண விரும்பாதது ஆகிய சம்பவக் கோர்வைகள் தாம் இவை" எனும் கதைஞரின் ''எச்சரிக்கை" மேற்காட்டிய ''அமைவுகளை'' அறிவிக்கின்றது.

இவ்வமைவுகளைக் கதைஞர் நயம்பட, சுவைபட, உறைபட, எழுபட, வழிபட, வாழ்த்துப்பட எழுதியுள்ளார் தம் கதைகளூடே.

புதுமைப்பித்தனின் புதுமையினை 1940 ஆம் ஆண்டுத் தமிழகத்தின் சில இலக்கியக் கூறுகள் விரும்பவில்லை. அவ் விரும்பாமையினை ''விருப்புறுத்தும் தமிழிலக்கிய வறட்சி வெருட்டுக்கள் தாம் இப்புரட்சிக் கதைத்திரட்டுக்கள்.

இத்திரட்டுக்களை ''ஒரு வகையில் நல்ல மாதிரி'' என நினைக்கும் கதைஞர் அதற்கு இரண்டு ரகமான வார்ப்புத் தன்மை இருப்பதை, '1936 க்கும் முந்தை சரக்காகவும்', '1943 ஆம் வருஷத்துச் சரக்காகவும்' படைத்துள்ளதைக் கூறுகின்றார்,

காஞ்சனை, புதிய கூண்டு, வெளிப்பூச்சு, மகாமசானம்,

உணர்ச்சியின் அடிமைகள், நிலாயந்தான், சுப்பையா பிள்ளையின் காதல்கள், செல்லம்மாள் மோட்சம், தியாக மூர்த்தி, சாப விமோசனம். நியாயம், கட்டிலைவிட்டிறங்ககாக் கதை, கடவுளும் கந்தசாமிப் பிள்ளையும் எனும் 14 கதைகளைக் கொண்ட இத்திரட்டு ''காஞ்சனை'' எனும் பெயரில் 1943 இல் முதலில் வெளியிடப்பட்டுப் பின் 1955 திலும் பின் 1967 லும் இரண்டு, மூன்றாம் பதிப்புக் களைக் கலைமகள் காரியாலயத்தால் பெற்றிருக்கிறது.

கட்டுப்பெட்டியாகி வெட்டி முறைக்காணும் விருதா விமர்சகர் களுக்குக் கதைஞர் எச்சரிக்கின்றார்.

''தொன்னைக்கு நெய்தான் ஆதாரம்'' என்று கருதுபவர்கள் தாம், ஒரு குறிப்பிட்ட கோலவகையில் தான் எதுவும் அமைந்திருக்க முடியும் என்று நினைக்கின்றார்கள். வேறு ஒரு விதமான கோலம் போட்டுக் காண்பிக்க முடியாது, கூடாது, என்று கருதுகிறவர்கள்— இவர்கள் தத்துவவாதிகள். உலக சிருட்டி இவர்களுடைய தத்துவத்துக்குள் மட்டும் ஒடுங்கிவிடவில்லை.

தன் புதுமைக் கோலத்தை உச்சரிக்கின்றார்.

''நான் கதை எழுதுகிறேன். அதாவது சரடுவிட்டு, அதைச் சகிக்கும் பத்திரிகைஸ்தாபனங்களிலிருந்தும் பிழைக்கிறவன். என் னுடையது அங்கீகரிக்கப்படும் பொய்............ இதற்குத்தான் கற்பனா மூலமாக சஞ்சாரம் செய்தல் என்பார்கள். இந்த மாதிரி பொய் சொல்கிறவர்களையே இரண்டாவது பிரம்மா என்பார்கள். இந்த நகல் பிரம்மா பரம்பரையில் நான் கடைக்குட்டி. நாங்கள் உண்டாக்குவது போல், அந்த பிரம்மனின் கைவேலையும் பொய் தானோ? நான் பொய்யா?" திடீரென்று இந்த வேதாந்த விகாரம் இரவு சுமார் பன்னிரண்டு மணிப்போதுக்கு ஏற்பட்டால் தன்னுடைய ஜீரண சக்தியைப் பற்றி யாருக்குத்தான் சந்தேகம் தோன்றாது" எனும் தொடக்கப்பகுதியே 'புதுமைப் பித்தனை'' முழுமையாக வாசகர்கட்கு அறிமுகப்படுத்துகிறது. முதற் பகுதி ''தன்னளவு'' பற்றிய நேர்க்கருத்தினையும், இரண்டாவது அவரது நுணுகிய, தெளிவான தர்க்க விசாரணையினையும், மூன்றாவது அவரது கிண்டல் முறையினையும் தெளிவாகக் காட்டுகிறது.

புதுமையில் பித்தனாக இருப்பினும் கதைஞர் ஓர் முறையான 'இந்து' நெறிஞனாகவே தம் கதைகளில் காணப்படுகிறார்.

தமிழகத்தின் ''தோன்றிக் கொல்லிகளாம்'' சமய அபேத நய வஞ்சகக் கொள்கையை புதுமைப் பித்தனைத் தவிர வேறொருவர்

இதுகாறும் நகைபட, உறைபட எடுத்துரைத்தவரிலர். "புதிய கூண்டு" எனும் கதையில் "பாளையங்கோட்டை கிறிஸ்துவக் கலாசாலை ரோமன் கத்தோலிக்க மதத்தினருடையது.

அதாவது இருள் சூழ்ந்த பிரதேசங்களில், கர்த்தருடைய மதத்தைப்பரப்ப ரோமாபுரியிலிருந்து அனுப்பப்படும் கருவி, தன் கையை வைத்தே தன் கண்ணில் குத்திக்கொள்ள வைப்பது போல், பழகிய யானையை வைத்துக்கொண்டு காட்டு யானைக் கூட்டங்களைப் பிடிப்பது போல், இந்தத்தொழில் நடந்து வந்தது" எனக் கூறும் விளக்கம், அதன் கதையில் ஸ்ரீ ஜான் சகரியாஸ் நாடாரின் செல்வி. லில்லி அற்புதம் ஜெயலெஷ்மியின் வாயிலாக அழுமையான இந்து பிராமணக்குடும்பத்தினின்றும் 'கிட்டுவை'ப் பிரித்து கிறிஸ்தவராக்குவதிலும், அதனால் அவன் தாய் மீனாட்சியம்மாள் நலிவுறுவதிலும், வைராக்கிய இந்துவாகிய அம்பியும் புதுமைப்பித்தன் காலத்திய "மதமாற்ற" இருண்மைகளை வெளிச்சமிட்டுக் காட்டுகின்ற பகுதிகளாகும்.

அதிலும் புராட்டஸ்டான்ட், கத்தோலிக்கர் எனும் வர்க்கப் போராட்ட நிலைமையினை ஞானாதிக்கச் சாமியாரின் வாய்மொழியால் வெளிப்படுத்தும் பாங்குமிக நளினமானது. "வெண்ணெய் திரண்டு வரும்போது பானைஉடைந்தால் சீற்றம் வருவது இயற்கை தானே ? ஆனால் அதைவிடப்பன்மடங்கு சீற்றம், வெண்ணெயை மற்றவன் அடித்துக்கொண்டு போகும் ஏமாற்றத்தினால் ஏற்படும் போழ்து......" என ஞானாதிக்க சாமியார் கத்தோலிக்கர்களாக்க முயன்ற கிட்டுவை, ஜெயலெஷ்மி புராட்டஸ்டான்ட் ஆக்கிய நிகழ்ச்சியை விளக்கு முகத்தான் கூறித் தன் ஆழ்ந்த சிந்தனை ஓட்டத்தினைத்தாக்கச் செய்துள்ளார் கதைஞர்.

கிறித்துவமதத் தோற்றங்களைக் கதைஞர் கூறும் அழகே அழகு.

"கிறித்து பிறப்பதற்கு முன்பு, உண்டாகுக என்று அருளியதும், உலகம் அவர் போட்ட வரிசைப்படி தழைத்து அப்பெருமானுக்குக் களிப்பூட்டிற்றாம். இதைப்போலவே இந்தப்பாதிரிகளும், தாங்களே கர்த்தர் பெருமான் என்று நினைத்துக் கொண்டனரோ என்னவோ? அங்கிருந்த நாடார்களை நீரைத் தெளித்து "நீங்கள் கிறிஸ்துவர் களாக்கக்கடவது!" என்றதன் பயனாக விளைந்தவற்றில் சகரியாஸ் குடும்பமும் ஒன்று" எனும் இப்பகுதி அவரது நுண்மையான அங்கதத்திறனை நிலைநிறுத்தி நிற்கிறது.

உண்மை சற்று காரமானதாகத்தான் இருக்கும் என நினைத்தற்கேதுவாக ''கிறித்துவ சமூகத்தின் சுதந்திரமும், சிறுமைப்புத்தியும், அறிவும் படைத்தவள்'' என ஜெயலெஷ்மியை அறிமுகப்படுத்தும் புதுமைப்பித்தனின் தாக்கம் காரமானதுதான். என் செய்வது. உள்ளொன்று வைத்துப் புறமொன்று எழுதுவது தம் தொழிலல்ல என்பதில் அம்பியைப் போன்றே வைராக்கியமும் படைத்தவரன்ரே புதுமைப்பித்தன் !

'ஜெயாவைப்போல் ஒரு சகதர்மினி அகப்படாள் என்பதும் உண்மையே! வாழ்க்கையின் லட்சியம் அத்னோடு முடிவடைந்து விடுகிறதா கிறித்துவமதம்.

''நான் சொல்வதை நம்பு, நீயாக ஆலோசிக்க உனக்கு அனுமதி இல்லை" என்கிறது. ஹிந்து மதம் ''நீ என்ன வேண்டுமானாலும் எண்ணு; ஆனல் சமூகக்கட்டுப்பாடு என்ற வேலியைத் தாண்டாதே'' என்கிறது. இவற்றில் எது பெரியது?" எனக்கேட்கும் புதுமைப் பித்தனின் வினா சங்கடமானதுதான். என் செய்வது. சமுதாய இதய நோய்களாலன்றோ அவரது மருத்துவத்தாக்கம்,... சங்கட மாகவன்றோ உள்ளது... நிகழ்கின்றது. வலிக்கத்தான் செய்கிறது. ஆனல் தாக்கத்தின் நோக்கம்....

அவரது தாக்கம் இன்னும் சற்று வலிவாக ''நியாயம்'' என்னும் கதையில் காணக்கிடக்கிறது.

'தேவ இறக்கம் நாடார் — அவருக்கு வல்லின இடையினங் களைப் பற்றி அபேதவாதக் கொள்கையோ தனது பெயரை அழுத்த மாகச் சொல்ல வேண்டுமென்ற ஆசையோ, எதுவானாலும் அவர் எப்பொழுதாவது ஒரு தடவை இந்த டமிலில் எழுதுவது போலவே எழுதி விடுவோம்.'' எனும் பகுதி தமிழகத்தில், தமிழ்மக்களிடையே பிறந்து, பின் காலக்கோலத்தில் கிறித்துவர்களாக மாறியதாலேயே, தாங்கள் மேனாட்டுக் காரர்களாகிய உயர்சாதியினராயும், இந்துக் களை அஞ்ஞானிகளாயும், இந்த டமில் எனத்தன் சொந்தத்தாய் மொழியையே 'அஞ்ஞானி' மொழியாகக்கருதி இழிவு படுத்திய புதுமைப்பித்தனின் காலநிலையினைத் தெளிவாகக் காட்டிச் சிந்திக்க வைக்கிறது.

''தரும தொரைகளே ! எங்குருதயெ புள்ள மாருதி வளக்கேன், வவுத்துக் கொடுமெ, இல்லாட்டாகே நாம் போடுவனா சாமி?" எனக்கேட்கும் ''சொள்ள முத்து பிள்ளைக்குக் கூட இரக்கம் காட்டாத தேவ இறக்க நாடார், S. P. C. A. வழக்கில் அவனுக்கு

''5ரூவா அவராதம், தவறினா ஒருமாதக் கடுந்தண்டனை" விதித்த அன்றே இரவு, ''பரமண்டலங்களிலிருக்கும் எங்கள் பரம பிதாவே! ... எங்கள் பாவங்களை எங்களுக்கு மன்னியும். நாங்களும் எங்களிடம் கடன்பட்டவர்களுக்கும் மன்னிக்கிறோமே...'' என வழிபடுவதனைக் காட்டும் புதுமைப்பித்தனை, புரட்சிக்கதைஞர் என்பதிற்புரையுமுளவோ ?

''சிலசமயம் பால்ராஜி ஐயர் அவர்கள் ஓர் இருபதாம் நூற்றாண்டு இந்திய யோவான் ஸ்னானகனைப் போல், ''ஏ! விரியன் பாம்புக்குட்டிகளே உங்கள் பாவங்களை ஒப்புக்கொள்ளுங்கள் ... என உற்சாகமாகப் பிரசங்கிக்கும் போது, தமது அருமை மேரிக் குஞ்சு முதல், அங்கு வந்திருக்கும் வெள்ளைக்கார பிஷப் உட்பட எல்லாம் இரட்டை நாக்குகளை நீட்டிக்கொண்டு நெளிவது போல் தோன்றும்'' என்னும் பகுதி, புதுமைப்பித்தனின் ''விமர்சகர்களுக்கு" எனும் எச்சரிக்கையின் ''வேதாந்திகள் கைக்குள் சிக்காத கடவுள் மாதிரிதான் நான் பிறப்பித்து விட்டவைகளும். உங்கள் அளவு கோல்களைத்தான் என் கதைகளின் அருகில் வைத்து, அளந்து பார்த்துக் கொள்கிறீர்கள்.'' எனும் பகுதிக்கு இடனாகவே விளங்கி அவர்தம் புரட்சித் தாக்கத்தினைத் தெற்றென விளக்கிநிற்கிறது எனலாம்.

குல மகளிரா, விலை மகளிரா ? அல்லது கற்பனை மகளிரா ?

சி. வி. சவரிமுத்து

20, அருளானந்தம்மாள் நகர், தஞ்சாவூர்.

நமது தமிழ்ப் பொழில் 1982 சூலை—ஆகஸ்டு இதழில் திரு. அரங்க. நலங்கிள்ளி அவர்கள் உலா இலக்கிய மகளிர் என்ற பொருள் பற்றி அரியதோர் ஆய்வுக்கட்டுரையைப் படித்த காரணத்தால் இக்கட்டுரையை அவர்க்குப் பாராட்டுரையாக எழுதி மகிழ்கிறோம்.

உலா இலக்கியங்களில் பாட்டுடைத் தலைவன் உலா வரும் போது அவனது புற அழகினைக் கண்டு காதல் நோயுறும் பெண்கள் விலைமகளிர். எனவே இக்கால ஆய்வாளர்கள் கூறுகின்றனர்; உலாக் காணும் மகளிரா என ஆய்வதும், அவர்கள் விலை மகளிர்

அல்லர் என நிறுவுவதும் இக்கட்டுரையின் நோக்கம்'' எனச்சொல்லி தம் கட்டுரையைத் தொடங்கியுள்ளார் இவ்ஆய்வாளர்.

இவ்வாறு நுதலிப் புகுந்ததைச் சுருங்கச் சொல்லி நமக்கு விளங்க வைத்தார் அவர் என்பது என் பாராட்டுரையாகும்.

நமது தமிழ்ச் சமுதாயத்தில், தொன்று தொட்டுக் குலமகளிர் விலை மகளிர் என்ற பாகுபாடு தொடர்ந்து வருவது நமது துரதிட்டமேயாகும். தொல்காப்பியம் முதல் இன்று மட்டும் இவ்விரு வகுப்பினரும் இருந்து வருகின்றனர்.

திரு. ந, வீ. செயராமனும், திரு. சிலம்பொலி செல்லப்பனும் 'உலா இலக்கியங்களில் கூறப்பட்ட ஏழு பருவ மகளிர் குல மகளிர் அல்லர், பரத்தையார்' என்ற கூற்றுக்களுக்கு மறுப்புரை கூறும் திரு. அரங்க. நலங்கிள்ளி, இளம்பூரணர், 'விலை மகளிர் குல மகளிர் என்ற எவ்வித வேறுபாட்டையும் குறிப்பிடவில்லை என்றும் கூறுகிறார். அடுத்து, நச்சினார்க்கினியர், உலா இலக்கிய மகளிர் பரத்தையரே என்ற கருத்தே பின்னால் இலக்கிய மகளிர் என்னுங் கருத்துக்கு வித்திட்டு விட்டது என்று நயம்படக் கூறியுள்ளார் நலங்கிள்ளியார்.

அடுத்து, தன் கொள்கையை நிறுவ, நலங்கிள்ளியார் பெருங் கதையில் வந்துள்ள ஐந்து வரிகளை மேற்கோள் காட்டி, 'உத்தம மகளிர்' என் பது' யார் என்றும், 'மற்றைக் கன்னியர் யார் என்றும் காட்டுகிறார்.

'இங்கு உத்தம மகளிர் என்பது உலாவரும் தலைவனின் பேரழகைக் கண்டபோது அவள் பால் மனம் செல்ல ஒட்டாது' நிறைகாத்து இறைபற்றிலோ அல்லது அலங்கார அழகிலோ மட்டும் மகிழ்கின்ற திருமணமான பெண்டிர்களையோ என்றும், 'மற்றைக் கன்னியர்' என்பதற்குக் கன்னிமை கழியாத, திருமண மாகாத பெண்களையே குறிக்கின்றார் என்பதே பொருந்தும்.''

இம் முடிவு பொருத்தமானதே என்று நாமும் ஒப்புக் கொள்ளு கிறோம்.

இறுதியாக, நலங்கிள்ளியார் ஒரு வினாவை எழுப்பி அதற்கு விடையும் கொடுத்துள்ளார்.

கேள்வி: உலா இலக்கியங்களில் பேசப் படுகின்ற மகளிர் குல மகளிரா அல்லது விலைமகளிரா அல்லது கற்பனை மகளிரா என்ப தேயாகும். இதற்கு விடைகாண திரு. ச. வேங்கடராமச் செட்டியார்

கூறியுள்ளதை மேற்கோள் காட்டித் தம்கருத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுகிறார் அதைக்கீழே காண்க.

சேரமான் பெருமாள் நாயனார் தமது காலம் வரையில் இருந்த மன்னர் உலா வரும்போது மங்கைப் பருவத்து நங்கையர் மட்டுமே காதலித்ததாகத் தனித்தனிச் செய்யுளாகப் பாடும் முறையை மாற்றிச் சிவபிரான் உலாவந்ததாகவும், அவ் உலாவில் பேதை முதல் பேரிளம் பெண் இறுதியாக உள்ள மாதர்கள் எல்லாம் காதல் கொண்டதாகவும் கருத்தமைத்து நெடிய கலி வெண்பாட்டால் செய்யும் புதுநெறியை உண்டாக்கினார்'' என்றார் திரு. ச. வேங்கடராமச் செட்டியார்.

இதுவோர் சிறந்த கருத்து. இதனை ஓரளவு ஆராய்வோம்.

திருக்கைலாய ஞான உலா

இவ்வுலாவைப் பற்றி நலங்கிள்ளியார் உரைத்துள்ளதும் நம் பாராட்டுக்குரியது.

இந்த ஞான உலாவே தமிழ் இலக்கிய வகைகளுள் காணப்படும் உலா நூல்களுள் மிகத்தொன்மையும் முதன்மையும் என்ற காரணத்தால் இதனை 'ஆதியுலா' என்பர். 'இறைவன் உலா வருங்கால், அவனைப் பேதை முதல் பேரிளம் பெண்ணீறாக மகளிர் பலரும் கண்டு நயக்கின்றனர். அவர்கள் அனைவருக்கும் அருள் நோக்கம் செய்து திருவுலா வந்து அமைகின்றான் சிவபெருமான் என்பது இதன் பிண்டித்த பொருளாகும்' என்றார் அவ்வை துரைசாமி பிள்ளை அவர்கள் (சைவ இலக்கிய வரலாறு, பக்கம் 272) இதே கருத்தை எம் நண்பர் திரு. க வெள்ளை வாரணரும் அரண் செய்துள்ளார்கள். (பன்னிரு திருமுறை வரலாறு, இரண்டாம் பகுதி. பக். 610).

இவ் ஆதியுலாவுக்கு முன் வந்த உலா நூல்கள் நாட்டு மன்னர் உலா வரும்போது மங்கைப்பருவத்து நங்கையர் மட்டுமே காதலித்ததாகப் பாடும் பொதுநெறியை மாற்றிச் (அதாவது, உலகியல் நெறி (secular) சிவபிரான் உலா வந்ததாக ஒரு புதிய நெறியைச் சேரமான் பெருமாள் நாயனார் என்பதை மேலே கண்டோம். பழைய நெறியைக் களைந்து புதுநெறியை உண்டாக்கினார் என்பது, தமிழ் இலக்கிய வரலாற்றில் ஒரு திருப்பு மையமாகும்.

ஆங்கிலேயரும் தஞ்சை மராட்டியரும்

செல்வி. சுந்தர செல்வம், M. A.
மகளிர் கல்லூரி, தஞ்சை.

பண்டைக் காலத்தில் தங்களுடைய நல்லாட்சியின் காரணமாக மக்களின் அன்பைப் பெற்று, மக்கள் தங்கள் பொருளையும், உழைப்பையும், கல்வியையும், கலைத்திறனையும், தத்துவ ஞானத்தையும், கற்கோவில்களின் மூலமாகவும் நூல்களின் மூலமாகவும் பரம்பொருளான கடவுளுக்கு அர்ப்பணம் செய்யும்படித் தூண்டிப் புகழ் அடைந்த சோழர், நாயக்கர். மராட்டியர் ஆட்சியில், தஞ்சை தலைநகராய் இருந்தது. ஸ்ரீ பிரகதீஸ்வர சுவாமி ஆலயம், கணக்

(முன் பக்கத் தொடர்ச்சி)

இவ்வுண்மையை, திரு. மு. வரதராசனார் 'பாடல்களில் திருப்பமும் நெகிழ்ச்சியும்' என்ற தலைப்பில் எழுதியது இவண் குறிப்பிடத்தக்கதாகும். சங்க இலக்கியம் பக்தி இலக்கியமாக மாறி வளர்ந்த வளர்ச்சியின் சிறப்பை நன்கு உணரலாம்.

''பெயர் குறிப்பிடப்படாமையால் இன்னார் என்று உணரப் படாத கற்பனை மனிதர் இருவரின் காதலாக இருந்த பாட்டுக்கள் **மாறி**, தெய்வத்தின் மீது கொண்ட காதலைப் பாடும் பாட்டுகளாக வளர்ந்தன. அரசர்களின் வீரச் செயல்களைப் பாடும் நிலை **மாறி**, கடவுளின் அற்புத விளையாட்டுகளைப் பாடும் நிலை வளர்ந்தது. வள்ளல்களின் கொடையைப் பாடும் பாடல்களுக்கு **ஈடாக**, கடவுளின் அருட்செயல்களைப் பாடும் பாடல்கள் வளர்ந்தன. கற்பனைக் காதலுக்குப் **பின்னணியாக**, அந்தந்த ஊர்களின் இயற்கைச் சூழல் வர்ணிக்கப்பட்டிருந்தது **மாறி**, கடவுளிடம் செலுத்தும் பக்திக்குப் பின்னணியாக அந்தந்தக் கோயில் தலங்களைச் சூழ்ந்த இயற்கை யழகைப் பற்றிய வருணனைகள் அமைந்தன. [Kings and their palaces were given up and god, the king of kings, and his Temples because the theme of the Bhakti poets.)

மேற்கூறிய கருத்துக்களைக் கொண்டே, உலா இலக்கியங் களில் பேசப்படுகின்ற மகளிர் குலமகளிரா விலை மகளிரா அல்லது கற்பனை மகளிரா என்று கொண்டு நம் கட்டுரையாசிரியர் இக் கேள்விகட்கு விடையளித்தார் எனக் கருதி நாம் அவரைப் பாராட்டு கின்றோம்.

கற்ற சாஸ்திர நூல்கள் அடங்கிய ராஜா சரபோஜி நூல்நிலையம், சிற்பங்கள் நிறைந்த கலைக்கூடம் முதலியன தஞ்சை நகரம் முற்காலத்தில் இருந்த உன்னத நிலைக்குச் சான்றுகளாகும். தெய்வ பக்திக்கும், கலைக்கும், கல்விக்கும், வீரத்திற்கும், நீதிக்கும் விவசாயத்திற்கும் தஞ்சையும் அதன் சுற்றுப்புறங்களும் தொன்று தொட்டு நிலைக்களமாக இருந்து வந்தன என்பதற்குக் கல்வெட்டு களும், வரலாற்றுச் சான்றுகளும் உள்ளன.

தஞ்சையை இறுதியாக ஆட்சி செய்தவர்கள் மராட்டியர். அம்மராட்டிய மன்னர்களுக்கும் இந்தியரைத் தங்கள் ஆளுகையின் கீழ் உட்படுத்திய ஆங்கிலேயர்களுக்கும் உள்ள உறவு மிகவும் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்தது. அவர்களுக்கிடையே உள்ள உறவை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

மராட்டியர்களுக்கு முன் தஞ்சையை ஆட்சிசெய்தவர்கள் நாயக்கர்கள். அவ்வம்சத்தின் கடைசி மன்னனான செங்கமலதாஸ் சிறியவனாய் இருந்தபடியால் தஞ்சையில் பல குழப்பங்கள் உண்டாயின. அதனால் அவருடைய அமைச்சரான வெங்கண்ணா வின் வேண்டுகோளின்படி மராட்டிய மரபில் வந்த வெங்கோஜி என்னும் ஏகோஜி, தஞ்சாவூரை கைப்பற்றினார். இவ்வாறு கி. பி. 1676 முதல் மகராஷ்டிர ஆட்சி தஞ்சாவூரில் தொடங்கியது. வெங்கோஜிக்குப் பின் அவனுடைய முதல் மைந்தனான ஷாஜி 1684 முதல் 1712 வரை அரசாண்டார். இரண்டாம் மைந்தன் சரபோஜி 1712 முதல் 1728 வரை அரசாண்டார். சரபோஜிக்குப் பின் துக்கோஜி என்ற முதலாம் துளசாஜி பட்டத்திற்கு வந்தார். இவருக்குப்பின் இவருடைய மகனான ஏகோஜி என்ற பாபாசாகேப் 1736ல் ஒரே ஆண்டு ஆட்சிபுரிந்தார். எகோஜியின் மனைவி சுஜானாபாய் தன் சிறிய மகன் பிரதாபிற்குப் பதிலாக அரசியாக இரண்டு வருடங்கள் ஆட்சி புரிந்தார்.

முதலாம் சரபோஜியின் மகனாகக் கருதப்பட்ட சாஹிஜி அல்லது காட்டு ராஜா என்பவர் சுஜானாபாய் என்பவளின் அதிகாரத்தை அரசியல் அரங்கின் பிற்பகுதிக்குத் தள்ளிவிட்டார். பிறகு சாஹிஜி தன்னுடைய பதவி ஆட்டங்காணும் நிலை ஏற்பட்டபொழுது பிரஞ்சு அரசாங்கத்தின் உதவியைக் கோரினார். அதற்கு ஈடாக காரைக்கால் எனும் ஊரைக் கொடுப்பதாக வாக்களித்தார். அதே சமயத்தில் தஞ்சையில் அதிக அதிகாரம் படைத்திருந்த படைத் தலைவன் சையத் என்பவர் சுஜானாபாயைச் சிறைப்படுத்தி அவளது அன்புக்குப் பாத்திரமான சிதோஜி என்ற அமைச்சரையும் அவரது இரு சகோதரர்களையும் தஞ்சையிலிருந்து விரட்டி அடித்தார்.

சாஹூஜி 1738 ஆம் ஆண்டு தஞ்சைக்குத் திரும்பிவந்து ஒரு வருடம் ஆட்சி செய்தார். அப்பொழுது பிரஞ்சுக்காரர்கள் ஆதிக்கம் காரைக்காலில் நிலைநாட்டப்படுவதை விரும்பாத காரணத்தால், அதை தடுக்க முற்பட சந்தாசாகேப் தஞ்சையின் மீது படையெடுக்க நேரிட்டது. படையெடுப்பின் பயனாக காரைக்கால் மீண்டும் பிரஞ்சுக்காரர்களுக்கு விட்டுக் கொடுத்ததன் மூலம் இந்தச் சண்டையை ஒரு முடிவுக்குக் கொண்டு வந்தாலும், விரைவில் அவர் டிப்பி எனப்படும் சலவைத் தொழிலாளியின் மகன் என்பது கண்டு பிடிக்கப்பட்டதால் சிம்மாசனத்திலிருந்து விலக்கப்பட்டார்.

அவருக்குப் பின் பிரதாப்சிங் 1739ல் அரியணை ஏறினார், கிழக்கிந்திய கம்பெனி பிரதாப்சிங்கை 'மேன்மை தங்கிய' என்று அழைத்து அவரை ஒரு சுதந்திர மன்னராக நடத்தியது. 1739 ஆம் ஆண்டு பிரதாப்சிங்கும். ஆங்கிலேயரும் சேர்ந்து காரைக்காலைப் பிடிப்பதற்குத் திட்டமிட்டனர். அதையறிந்த சாஹூஜி, ஆங்கிலேயரை பிரதாப்சிங்கிடமிருந்து பிரிப்பதற்காக, போரில் ஏற்படும் செலவையும், தேவ கோட்டையையும் ஆங்கிலேயர் களுக்குத் தருவதா ஆசைகாட்டி பிரதாப்சிங்கிற்கும், ஆங்கிலேயருக்கும் இருந்த உறவை முறியடிக்க ஆங்கிலேயரிடம் உடன்படிக்கை செய்துகொண்டார்.

இந்தியர்களின் அரசியல் விவகாரங்களில் ஆங்கிலேயர்கள் தலை இடுவது இதுவே முதல் தடவையாகும். இவ்வாறு ஆரம்பிக் கப்பட்ட இக்கொள்கையானது பிற்காலத்தில் ஆங்கிலேயர்க்குச் சாதகமாகவும், இந்தியர்க்குப் பாதகமாகவும் முடிவுற்றது. பிரதாப்சிங்கிற்கு எதிராக இருமுறை ஆங்கிலேயர்கள் படையெடுத் தனர். தேவகோட்டை தஞ்சை மக்களால் வியக்கத்தக்க அளவுக்கு, பாதுகாக்கப்பட்டது. முதலாவது படையெடுப்பு, கோட்டையைப் பிடிக்க முடியாமல் தோல்வியுற்றது. இரண்டாவது படையெடுப்பில் கிளைவ் என்பவரும், லாரன்ஸ் என்பவரும் தங்களது திறமையை வெளிப்படுத்தினர். இறுதியில் ஆங்கிலேயர்கள் ஒரு உடன் படிக்கைக்குக் கையெழுத்திட்டனர். அதன்படி ஆங்கிலேயர்கள் தேவக்கோட்டையை பெற்றனர்.

இவ்வாறு அரசுரிமைப் போர் ஒரு வழியாக முடிவுக்கு வந்த வுடன், முகம்மது அலிக்கும், சந்தா சாகேப்பிற்கும் கர்நாடகப் போர் மூண்டது. அரசுரிமைப்போர் முடிவுக்காக காத்திருந்தது போல அது முடிவுற்ற உடனேயே இப்போர் மூண்டது தஞ்சாவூர்க்கு ஒரு தொல்லை போன்று இருந்த சந்தாசாகேப்பிற்கு ஆதரவாளர் களாக இருந்த பிரஞ்சுக்காரர்களும், முஸபர் சங்கும், அன்வாருதீன்

இறப்பும் நவாபின் பகைமையும் ஆகிய இவையாவும் சேர்ந்து, பிரதாப்சிங் ஆங்கிலேயருடன் சமாதானமாக இருக்கும்படி செய்தன. தஞ்சையின் நிலை மிகவும் கவலைக்குரியதாக இருந்தது. அது மற்றவரின் உதவியை நாடும் நிலையில் இருந்தது மட்டுமல்லாமல், தான் சார்ந்து உதவி செய்யாத ஆட்சியின் கோபத்திற்கும் ஆளாக நேரிட்டது. மராத்தி கல்வெட்டுகளில் முகம்மது அலி அகதியாக நாகப்பட்டினத்திலிருந்து திருச்சி சென்றபோது வழியில் தஞ்சையில் மூன்று மாதங்களுக்கு விருந்தினராக இருந்தார். தஞ்சை மன்னனால் ஓம்பப்பட்டார் என்று தெரிகிறது. சந்தாசாகேபும், முஸபர் சங்கும் திருச்சி செல்லும் வழியில் தஞ்சையில் தங்கியதாகத் தெரிகிறது.

இதற்கிடையில் ஆங்கிலேயர்க்கும், பிரதாப்சிங்கிற்கும் இடையே நட்புகோரும் மடல்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டன. ஆனால் முன்பு தஞ்சையின் மேல் எடுக்கப்பட்ட படையெடுப்பின் அழிவுகளை மறவாத அரசர், முதலில் நடுநிலைமையையே கடைப்பிடித்தார். முகம்மது அலி திருச்சிராப்பள்ளியில் தனது விரோதிகளால் சூழப்பட்டபோது மைசூர் அரசின் பிரதிநிதியாக இருந்த நஞ்சராஜாவின் உதவியைப் பெற்றார். இதனால் நம்பிக்கை அடைந்த பிரதாப் தானும் அவர்களோடு சேர்ந்து கொண்டார். திருச்சிராப்பள்ளியானது இந்தக் கூட்டு முயற்சியின் பயனால் முகம்மது அலி கைக்கு வந்தது. தஞ்சை தளபதி மனோஜி என்பவர் கோட்டையைப் பிடிக்க பெரிதும் உதவி செய்ததனால் லாரன்ஸின் தலைமையின்கீழ் கோயிலடி என்னும் இடம் பிரஞ்சுகாரரிடமிருந்து பிரதாப் சிங்கிற்க்கு வழங்கப்பட்டது. ஏனெனில் இப்போர் நடந்தபொழுது தஞ்சை போருக்குத் தேவையானவற்றையெல்லாம் கொடுக்கும் ஒரு நிலைக்களனாக இருந்தது. முகம்மது அலியின் தூண்டுதலின்படி தன்னிடம் அடிபணிந்த சந்தாசாகேப்பை மனோஜி கொன்றுவிட்டார். இத்தகைய உதவிகளுக்காகத் தஞ்சை அரசர்க்கு கோயிலடி, ஏலன் காடு என்ற ஊர்களும் கொடுக்கப்பட்டுப் பத்துவருடமாக கட்ட வேண்டிய கப்பமும் நீக்கப்பட்டது. கீழைநாடுகளின் அரசியல் முறைப்படி தஞ்சை மன்னர் நடந்துகொண்டார் என்று ஆங்கிலேயர் எண்ணும்நிலை ஏற்பட்டது.

1757ல் கிழக்கிந்திய கம்பெனி, பிரதாப்சிங்கிற்கு, அவனுடைய இடத்தில் வேறு ஒருவரை அமர்த்தவேண்டும் என்ற எண்ணம் பிரஞ்சு அரசாங்கத்திற்கு உள்ளது என தெரியப்படுத்தியது. அதற்கு பிரதாப்சிங் ''இதுவரையில் 25பேர் எனக்கு எதிராகப் பதவிக்கு வர அமைக்கப்பட்டனர். எனவே 25-தோடு 26-வதாக மற்றொருவர்

வருவது கண்டு நான் தளரப் போவதில்லை" எனப் பதிலளித்தார். முன்பு 1749ல் ஏற்படுத்திய உடன்படிக்கையின்படி 1758ல் தஞ்சை சந்தாசாகேப்புக்கு அளிக்க வேண்டிய 56 இலட்சங்களைப் பெறுவதற்கு லாளி தஞ்சையை நோக்கி படையெடுத்து வந்தார். ஆனால் அவருடைய முயற்சி மனோஜியால் தடுக்கப்பட்டது. அதே சமயத்தில் ஆங்கிலேயே கப்பல்படை ஒன்று காரைக்கால் வந்து அடைத்ததை கண்டு லாளி தஞ்சையிலிருந்து திரும்பினார். தஞ்சையிலுள்ள படைகள் ஒரு சிறிய ஆங்கிலேயப்படையுடன் சேர்ந்து பிரஞ்சுப்படையைத் தோற்கடித்தது. இவ்வாறு பிரஞ்சின் அதிகாரமானது தஞ்சையிலிருந்து அடியோடு நசுக்கப்பட்டது. மேலும் தஞ்சை மன்னன் 7வருடப் போரில் ஆங்கிலேயர்க்கு உதவியாக 600 குதிரைகள் தந்ததோடு பாண்டிச்சேரியைப் பிரஞ்சுகாரரிடமிருந்து ஆங்கிலேயர் பிடிக்க முற்பட்டபோது படை உதவியோடு பொருளுதவியும் தந்தார்.

ஆங்கிலேயர்கள் இவ்வாறு தஞ்சை மன்னரோடு மிகச் சிறந்த நட்புறவு கொண்டிருந்தார்கள். இது ''தஞ்சையும் நாங்களும் வேறு அல்ல'' என்ற ஆங்கிலேயரின் கூற்றுமூலம் தெளிவாகிறது. பிரதாப்சிங்கின் மரணத்திற்குப் பிறகு அவன் மகன் துளசாஜி பட்டத்துக்கு வந்தார்.

துளசாஜியும், ஆங்கிலேயர்களுடன் நட்புறவு கொண்டிருந்தார். துளசாஜி தன்னுடைய இறுதிநாட்களில் குடும்பத்தில் ஏற்பட்ட குழப்பங்களால் வருத்தமடைய ஏற்பட்டது. அவருடைய மைந்தர்கள் ஒருவர் பின் ஒருவராக இறந்தனர். அதனால் அவர் ஒரு சுவிகாரப் பிள்ளையைத் தன்னுடைய வாரிசாக எடுத்துக்கொண்டார். அச் சுவிகாரப்பிள்ளையே இரண்டாம் சரபோஜி. ஆனால் துளசாஜி இரண்டாம் சரபோஜி சிறுவனாய் இருந்தபடியால் அவருக்குப் பதிலாக அவர் பட்டமேற்கும் வரை தன்னுடைய சகோதரரான அமர்சிங் நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளவேண்டும் எனவிரும்பினார். கிழக்கிந்திய கம்பெனி ஓர் உடன்படிக்கையின்படி துளசாஜியின் வேண்டுகோளை ஏற்றுக் கொண்டது. அதன்படி தஞ்சையின் பாதுகாப்பிற்காகத் தஞ்சையில் நிறுத்தப்பட்டிருந்த ஆங்கிலேயரின் படையும் செலவுக்குத் தஞ்சையின் வருமானத்தில் 2/5 பங்கு கொடுக்கவேண்டும் என்பதும், மற்றும் போர்க்காலங்களில் இந்த தொகை இரட்டிப்பாக அதாவது வருமானத்தில் 4/5 பங்காக உயர்த்தப்பட வேண்டும் என்பதாகும். இந்த உடன்படிக்கையை தஞ்சை அரசர் ஏற்றுக்கொள்ள வேண்டியதாயிருந்தது.

பிறகு 1792ல் மற்றொரு உடன்படிக்கை தஞ்சை அரசுக்கும், கிழக்கிந்திய கம்பெனிக்கும் இடையே ஏற்பட்டது. அதன்படி ஆங்கிலக் கம்பெனி ஒரு ராணுவப் படையைத் தஞ்சையில் ஏற்படுத்தியது. அதற்குத் தஞ்சை அரசர் ஒரு குறிப்பிட்ட தொகை கொடுக்க வேண்டி இருந்தது. இவ்வாறு முதலில் தஞ்சையின் அயல்நாட்டு விவகாரங்களும், ராணுவப்படையும் ஆங்கிலேயரின் கைக்கு வந்தன. பிறகு வரிவசூலிக்கும்,அதிகாரமும், ஆங்கிலேயரின் கைக்கு மாறியது. இவ்வாறு படிப்படியாக ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கைகள் அனைத்தும் ஆங்கிலேயர்கள் எவ்வாறு மெதுவாக ஊடுருவி, ஆனால் உறுதியாகக் காலப் போக்கில் தஞ்சையைக் கைப்பற்றினார்கள் என்பதைப் பற்றி கூறுகின்றனர்.

சரியான வாரிசான சரபோஜிக்கு எதிராக அமர்சிங் ஆட்சியைக் கைப்பற்ற திட்டமிட்டதால் சென்னை ஆளுனர் தஞ்சைக்கு வர நேர்ந்தது. அவர் இங்கு சில பண்டிதர்களைக் கலந்தாலோசித்து துளசாஜியின் சுவிகார மைந்தனான சரபோஜிக்கு அரசுரிமை கிடையாது எனவும் துளசாஜியின் சகோதரரான அமர்சிங்தான் முறையான வாரிசு எனவும் 1793ல் பிரகடனம் செய்தார். ஆனால் அமர்சிங், இரண்டாம் சரபோஜியையும், துளசாஜியின் மனைவிமார்களையும் கொடுமைபடுத்தியதால் அவர்கள் அப் பொழுது கவர்னர் ஜெனரலாக இருந்த காரன்வாலிஸிடம் முறையிட்டனர். அதனால் ஒருவழியாக 2ம் சரபோஜிதான் முறையான வாரிசு எனக்கண்ட ஆங்கில அரசு அமர்சிங்கை அரியணையிலிருந்து இறக்கிவிட்டு இரண்டாம் சரபோஜியை கி. பி. 1798ல் அரியணையில் ஏற்றியது.

சரபோஜி தஞ்சையின் அரசராக ஆக்கப்பட்டாலும் அதிகாரம் அனைத்தும் ஆங்கிலேயரால் பிடுங்கிக் கொள்ளப்பட்டது. அரசன் என்று அழைக்கப்படும் உரிமை மட்டுமே சரபோஜிக்கு இருந்தது. அவர் சுவாட்ஸ் என்னும் ஐரோப்பிய அறிஞரிடம் கல்வி பயின்றார். சரபோஜிக்குப்பின் அவரது மகன் சிவாஜியின் ஆட்சி நடைபெற்ற போதிலும் அதிகாரம் யாவும் ஆங்கிலேயரிடம் இருந்ததால், அவருக்கும், அவர் வழி வந்தவர்க்கும் 1 லட்சம் பகோடாக்கள் உதவித் தொகையாக கொடுக்கப்பட்டு வந்தது.

இரண்டாம் சரபோஜி காலத்தில் மராமத்து இலாகா வெகு செம்மையாக வேலை செய்தது. தஞ்சைமாநகரில் முதன்முதலாகக் கழிவுநீர் அகற்றும் முறையை ஏற்படுத்தியவர் இவர்தான். சின்னஞ்சிறு சந்துக்கள் ஆனாலும் எங்கும் நீர் தேங்காமல் பூமிக்கடி

வானொலி நிலையங்களும், செய்தித்தாள்களும், தமிழுக்குச் செய்யும் தொண்டுகள்

திருத்துறைக்கிழார்,
3, மறைமலையடிகள் தெரு, சாமியப்பா நகர்,
திருத்துறைப்பூண்டி-614 713.

வானொலி நிலையங்களில் தமிழில் செய்திகள் திரட்டி எழுதுபவர்கள் மக்கள் யாவர்க்கும் புரியும்படி மொழியமைப்பு இருக்க வேண்டுமென்று சொல்லிக் கொண்டு நாடோறும் தமிழைக் கொச்சையாக்கியும், பிறமொழிச் சொற்களைத் தமிழில் கலந்தும் தமிழின் மரபைக் கெடுக்கின்றனர்.

(முன் பக்கத் தொடர்ச்சி)

யில் வாய்க்கால்கள் வழியே கொண்டு செல்லப்பட்டது. கி. பி. 1828 ல் சென்னை, கவர்னர் தஞ்சைக்கு வந்து இதை கண்டு சரபோஜியைப் பாராட்டிப் புகழ்ந்தார்.

திப்புசுல்தானோடு போர் புரிந்த ஆங்கிலேயர்க்குத் தன் குதிரைப்படையை அனுப்பி சரபோஜி உதவி செய்தார். மற்றும் ஆங்கிலேயர் மதுரைப் பாளையக்காரரோடு சண்டையிட்ட போதும் தம் படைகளை அனுப்பினார்.

தஞ்சாவூரில் சிறந்த கட்டுப்பாடான ஆட்சியை ஏற்படுத்த ஆங்கிலேயர் அப்பொறுப்பினைத் தாங்களே ஏற்றுக்கொள்ள விரும்பினார்கள். ஆகவே கி. பி. 1799 ஆம் ஆண்டு சரபோஜி ஆட்சிப் பொறுப்பில் இருந்து விலகி அதைக்கம் பெனியின் வசம் ஒப்படைத்தார்.

நாட்டாட்சியைச்சரபோஜிகம்பெனியாரிடம்ஒப்படைத்ததற்காக அவர் ஆங்கிலேயரிடமிருந்து தஞ்சையின் ஆண்டு வருமானத்தில் 1/5 பாகத்தையும், 1 லட்சம் வராகனையும் உபகாரச் சம்பளமாகப் பெற்றார். ஆளும் பொறுப்பு இல்லாமல் அரசர் என்ற பட்டப் பெயர் மாத்திரம் நிலைத்தது. இவ்வாறு ஆங்கிலேயர்கள் தஞ்சையைத் தம் வசப்படுத்தினர்.

தமிழில் வெளியிடப்படும் செய்தித்தாள்களும் அயல்மொழிச் சொற்களைத் தமிழாக்காமல் அப்படியே தமிழுடன் கலந்து தமிழ் எழுத்துக்களால் எழுதுகின்றன.

தமிழக அரசுப் பணியகங்களிலும், கல்வி நிலையங்களிலும் பணியாற்றுபவர் முழுமையாகத் தமிழில் எழுதவும் பேசவுந் திறனின்றிப் பலமொழிச் சொற்களையும் கலந்து எழுதுகின்றனர் ; பேசுகின்றனர்.

தமிழில் நூல்கள் எழுதுவாரும் அவ்வாறே தமக்குத் தெரிந்த மொழிச்சொற்களையெல்லாம் கலந்தே எழுதுகின்றனர்.

தமிழக அரசு தமிழ் வளர்ச்சியின் பொருட்டுக் கோடி கோடியாகச் செலவு செய்கிறது. ஆனால், கருதிய பயன்தானில்லை. என் ?

தமிழ்ப்பகைவர் பலர் தமிழ்ப்பற்றுள்ளவர்போல் நடித்துக் கொண்டு தமிழால் பிழைக்கின்றனர் ; ஆனால், தமிழைப் பிழைக் கின்றனர்.

தமிழைக் கொச்சையாக்கியும், தமிழில் கலப்படஞ் செய்தும் கெடுப்பதற்குச் சில காட்டுகள் தருவாம்.

தமிழ் நாட்டிலுள்ள வானொலி நிலையங்களில்,
'வானவாரி' என்று சொல்லவேண்டியதை, 'மானாவாரி' என்றும்,

'ஏழைமை'	,,	,,	'எழ்மை'	,,
'அருகில்'	,,	,,	'அருகாமையில்	,,
'வாசிப்பவர்'	,,	,,	'வாசிப்பது'	,,
'கோடைக்கானல்'	,,	,,	'கொடைக்கானல்	,,
'தொடர்வண்டி'	,,	,,	'புகைவண்டி, ரயில்'	,,
நிழற்படம், ஒளிப்படம்	,,	,,	'புகைப்படம்'	,,

நாள்தோறும் இவற்றைக் காதுகளால் கேட்கும் மக்கள் அப்படித்தானே பேசுவர். மக்கள் மேல் குறையில்லை. வானொலி நிலையத்திற்குக் குறைகளைச் சுட்டி எழுதியும் திருத்தவில்லை. தமிழ்ச் செய்தித் தாள்களில் எழுதும் தமிழைக் கவனியுங்கள் :–

1. எனக்கு ஃபைனல் எக்சாமின் நெருங்கிட்சி

2. சமயப் புரோகிதர்கள் ஆசீர்வதித்தார்கள்

3. சார், இந்த ரயில்வே ஸ்டேஷனில் எப்போதும் இப்படித் தான் நடக்கிறது.

வானொலி நிலையங்களும், செய்தித் தாள்களும் தமிழுக்குச் செய்யும் தொண்டுகள்.

4. நம்ம மேனகா கல்யாணப்பத்திரிகை வந்துதே பார்த்தியா?

5. லோக்சபாவில் பாரதப் பிரதமர் பல கிராமச் சுகாதார விஷயங்களைச் சொன்னார்

இவற்றைக் கீழ்க்கண்டவாறு எழுதினால் தமிழ் மக்களுக்குப் புரியாவா?

(1) எனக்கு இறுதித் தேர்வு நெருங்கி விட்டது.

(2) சமயக் குருமார் வாழ்த்தினர்.

(3) ஐயா, இந்த இருப்புப் பாதை நிலையத்தில் எப்போதும் இப்படித்தான் நடக்கிறது.

(4) நம் மேனகா திருமண அழைப்பிதழ் வந்ததே பார்த்தாயா?

(5) நாடாளுமன்றத்தில் இந்தியத் தலைமையமைச்சர் பல ஊர் நல்வாழ்வுக்குரிய செய்திகளைச் சொன்னார்.

இத்தகு தமிழ்க் கொலைகள் நாள்தோறும் நடந்து கொண்டிருக்கின்றன. இவற்றை நாம் பார்த்துக் கொண்டும், கேட்டுக் கொண்டும் இருக்கிறோம்.

"ஏனையா, தூய தமிழில் சொல்லக்கூடாதா? எழுதக்கூடாதா?" என்று கேட்டால் அவர்கள் (தமிழ்க் கொலைஞர்) கூறும் விடை வேடிக்கையாயுள்ளது.

"மக்கள் மொழியில் சொன்னால், எழுதினால்தான் எல்லார்க்கும் புரியும் ; பயன்தரும்" என்கின்றனர்.

நாம் அவர்களைக் கேட்கிறோம். "மக்கள் மொழி" என்று ஒரு மொழியுண்டா ? அதை யார் உண்டாக்கினர் ?

எமது விடை : மக்கள் மொழியென்று ஒன்று இல்லை. படித்தமக்(கு)கள் பேசுகின்ற,எழுதுகின்ற மொழியே படிப்பறிவில்லா 75 விழுக்காடு மக்கள் பேசுவது காதுகளால் கேட்டவற்றையே கல்லாத மக்கள் பேசுகிறார்களே தவிர அவர்களுக்கென்று எவ்வகை மொழியையும் யாரும் உண்டாக்கவில்லை. தமிழ்க்கொலை செய்பவர்க்கு 'மக்கள் மொழி' என்பதோர் சாக்கு.

இன்று, பிரதமர், ஜனாதிபதி, லோக்சபா, ராஜ்யசபா, பிரசாரசபா முதலான பல இந்திச் சொற்களையும்,

சார். ட்ரெயின். ரயில், பஸ், கார், கூப்பன், கார்டு, ஸ்டாம்ப் முதலிய பல ஆங்கிலச் சொற்களையும் படிக்காத மக்களும் சொல்லு கிறார்களே; கற்றுக் கொடுத்தவர் யார் ?

கற்றவர்கள் பேசும் போது காதால் கேட்டு அவர்களும் அச் சொற்களைப் பேசுகின்றனர்.

கற்றவர்கள் அச்சொற்களைத் தமிழில், முதன்மையமைச்சர், மக்களாட்சித்தலைவர் அல்லது குடியரசுத்தலைவர், நாடாளு மன்றம், மாநிலங்களவை, பொழிவு மன்றம் என்றும்,

ஐயா, தொடர்வண்டி, பேருந்து, உந்து, சீட்டு, அட்டை, பொறிப்பு என்றும் தொடக்கத்திலிருந்தே சொல்லியிருந்தால் கல்வியறிவில்லாத நல்ல மக்களும் அவ்வாறுதான் சொல்லுவர். குறை கற்றவருடையதே !

நம் நாட்டில், அரைகுறைப்படிப்பாளிகளே பலராகவுளர். அவர்களுக்குத் தமிழிலோ, ஆங்கிலத்திலோ, பிறமொழியிலோ, முழுமையான அறிவில்லை. அன்றியும், மொழிப்பற்றுமில்லை. எனவே, தமக்குத் தெரிந்த மொழிச் சொற்களையெல்லாம் கலந்து பேசியே தம் கருத்தைப் பிறர்க்குப் புலப்படுத்த இயல்கிறது. அவர்தம் பேச்சைக் கேட்கிற படிக்காத மக்களும் அவர்களைப் பின்பற்றியே பேசத் தொடங்குகின்றனர்.

இன்று, திரைப்படக்காட்சி, வானொலி, தொலைக்காட்சி களிலும் கலவை மொழியே பேசப்படுகிறது. அவற்றைக்கேட்கும் மக்களும் அவ்வாறே பேசத் தலைப்படுகின்றனர். இதனை மக்கள் மொழி என்பதைவிட 'அரைகுறைகள் மொழி' என்பது சாலப் பொருந்தும் எனவே, நல்ல தமிழ் நாட்டில் நிலவ......

1. அரசு அலுவலகங்களில் பணிபுரிபவர் அனைவரும் தமிழிலேயே எழுத-பேசவேண்டும்

2. தமிழ்ச்செய்தித்தாள்கள் பிறமொழிச் சொற்களைக் கலவாமல் எழுதவேண்டும்.

3. உண்மையாகவே தமிழ்ப்பற்றுள்ளவர்களை உயர்பதவி களில் அமர்த்தல் வேண்டும்.

4. எல்லாப்பாடங்களையும் நல்ல தமிழில் கற்பிக்கச் செய்தல் வேண்டும்.

5. தொடக்கப்பள்ளிகள், நடுநிலைப்பள்ளிகளில் தமிழ்ப்பாடம் கற்பிக்கத் தமிழ்புலவர்களை அமர்த்தல்வேண்டும்.

தமிழில் துணைவினைகள்

வி. ரேணுகாதேவி,
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்.

1.0 தமிழ்மொழியின் கண் காணப்படும் துணைவினைகளையும் அவை உணர்த்தும் பொருள்களையும் கண்டறிந்து அவற்றை அவை உணர்த்தும் பொருண்மை அடிப்படையில் பாகுபாடு செய்து துணைவினையின் கோட்பாட்டினை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

1. 1 துணைவினைகள்

துணைவினைகள் என்பன தம் அகராதிப் பொருளை இழந்து இலக்கணப்பொருளை உணர்த்தும் வினை வடிவங்களாகும்.

கண்ணன் பட்டம் விட்டான் – முதல் வினை

இராமன் கப்பல் செய்து விட்டான் — துணை வினை

பெரும்பான்மை மொழிகளில் துணைவினைகள் காணப் பெறினும் அவை ஒவ்வொரு மொழிக்கேற்ப சிலதனிப் பண்புகளைக் கொண்டுள்ளன.

தமிழில் துணைவினைகள் எப்போதும் முதல்வினையைப் பொருள்நிலையிலும் வடிவநிலையிலும் சார்ந்து முதல்வினைக்குப் பின்னிடத்தனவாக அமைகின்றன.

(முன் பக்கத் தொடர்ச்சி)

6. மேனிலைப்பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்களில் தமிழ் கற்பிப்பவர் தூய தமிழில் கற்பிக்கச் செய்தல் வேண்டும்.

7. மேடைப் பேச்சாளர், இலக்கிய பேச்சாளர் எங்குப் பேசினும் தூயதமிழில் பேசவேண்டும்.

8. 'ஐ' என்னும் எழுத்தை "அய், அஇ," எனப் போலியாக எவரும் எழுதக்கூடாது.

தமிழக அரசு மேற்கூறியவற்றைக் கட்டாயமாகச் செயல் படுத்தினால்தான் தமிழ் வளம்பெறும்; தமிழறிவு வளரும்; தமிழ்நாடு என்றும் தமிழ்நாடாக மிளிரும்.

கீதா சிரித்து விட்டாள்.

ஈண்டு 'விட்டாள்' என்னும் துணைவினைக்குத் தனியாக அகராதிப்பொருள் இல்லை. முதல் வினையின் இலக்கணப் பொருளையே இது சுட்டும் வகையில் அமைந்துள்ளது. வடிவ நிலையில் 'சிரித்து' எனவும் 'விட்டாள்' எனவும் பிரித்தால் கூட்டுவினை உணர்த்தும் பொருளைப் பெறமுடியாது. எனவே துணைவினை பொருள்நிலையிலும் வடிவநிலையிலும் முதல் வினையைச் சார்ந்து வரும் என்பது தெளிவாகின்றது.

இலக்கண ஆசிரியர்கள் துணைவினைகளைத் தம்தம் மொழியில் கையாண்டிருந்த போதிலும் துணைவினை எனும் பாகுபாட்டினைச் சுட்டவில்லை.

ஆயினும் 'இது செயல் வேண்டும்' (தொ. சொ. 243) என்னும் தொல்காப்பிய நூற்பாவில் 'வேண்டும்' என்னும் வடிவம் இரு வையின் நிலையும் பொருட்டாகும் பான்மையினைத் துணை வினையைப் பற்றிய செய்தியாகக் கருதும் நிலையும் உண்டு. (S. Agesthialingom, 1974 : 331—356).

தொல்காப்பியர் தம்மொழியில் 'ஆகும்', 'இரு', 'கூட', 'கொள்'' 'தகும்', 'படு', பெறு', 'வேண்டும்', போன்ற துணைவினைகளைப் பயன்படுத்தியிருந்த போதும் துணைவினை என்னும் பாகு பாட்டினைச் சுட்டவில்லை.

தொல்காப்பிய நூற்பாக்களில் சுட்டப்பெறும் சில அசைநிலை வடிவங்களைப் பொருள் நிலையிலும் வடிவ நிலையிலும் துணை வினைகளின் திரிந்த வடிவங்களாகச் சில அறிஞர்கள் கருதுகின் றனர். (தெ. பொ. மீனாட்சி சுந்தரன், 1975 : 77 : மோ. இஸ்ரேல், 1976 : 91-92)

ஜி. யு. போப் (1911:68), கால்டுவெல் (1956:456:447,449), ஆர்டன் (1969: 240) போன்ற மேலைநாட்டு அறிஞர்களும் தமிழ் மொழியில் காணப்பெறும் துணைவினை வடிவங்கள் சிலவற்றையும் அவைதம் பொருள் வழக்காறுகளையும் சுட்டியுள்ளனர்.

இக்கால மொழியியல் அறிஞர்கள் தெ. பொ. மீனாட்சிசுந்தரன் (1975;77), மோ. இசரவேல் (1976:91–98), ச. அகஸ்தியலிங்கம் (1980:1–32), பொன். கோதண்டராமன் (1980:59–78), இரா. கோதண்டராமன் (1980: 97–108), க. ம. இருளப்பன் (1980:167–186), க. இராமசாமி (1980:187–200), இரா. சீனிவாசன் (1980:231-

260), சுப. திண்ணப்பன் (1980:45–58), பி. புஷ்பவல்லி (1980:109–118), கோ.விசயவேணுகோபால் (1980:99–108), இ. அண்ணாமலை (1982:22–ஆகியோர் தமிழிலுள்ள துணைவினைகளையும், துணை வினைகளின் வரலாற்றினையும் தனிநிலைகளில் ஆராய்ந்துள்ளனர்

இக்கட்டுரை தமிழ் மொழியின்கண் காணப்பெறும் அனைத்துத் துணைவினைகளையும் ஒருமித்துக் காணும் ஒரு சிறு முயற்சியாக அமைந்துள்ளது.

1.2 துணைவிணையின் இயல்புகள்

தமிழ்மொழியின்கண் 'அடி', 'அருள்', 'ஆம்', 'ஆச்சு', 'இயலும்', 'இரு', 'இல்', 'உள்', 'எடு', 'ஒழி', 'காட்டு', 'கூடும்', 'கொண்டிரு', 'கொள்', 'செய்', 'தகும்', 'தள்ளு', 'தெரி', 'தொலை', 'நேர்', 'படு', 'பண்ணு', 'பார்', பெறு', 'போ', 'போடு', 'மாட்டு', 'முடியும்', 'வரு', 'விடு', 'வேண்டும்', 'வை', என்னும் வடிவங்கள் துணை வினைகளாகச் செயல்படுகின்றன.

துணைவினைகள் அனைத்தும், முதல்வினையைப் பொருள் நிலையிலும், வடிவ நிலையிலும் சார்ந்து முதல்வினையின் பின்னிடத்தனவாக அமைகின்றன.

இறைவன் செய்ய வைத்தான்

நான் பயந்து போனேன்

பெரும்பான்மையான துணைவினைகள் பால், எண், இடம், காலம், எதிர்மறை உருபுகளை ஏற்றுவருதல் உண்டு.

முருகன் செய்து காட்டினான்.

காட்டினான்	—	காட்டு + இன் + ஆ + ன்
		காட்டு — அடி
		இன் — இறந்தகாலம்
		ஆ — படர்க்கை
		ன் — ஆண்பால்—ஒருமை

இன்று மழை வரக்கூடாது

கூடாது	—	கூடு + ஆ + து
		கூடு — அடி
		ஆ — எதிர்மறை
		து — அஃறிணை — ஒருமை

துணைவினைகளால் சாரப்பெறும் முதல்வினைகள் வடிவ நிலையில் அடிச்சொல்லாகவோ, செயவெனெச்சமாகவோ செய்து வாய்பாட்டு வினையெச்சமாகவோ, வினைமுற்றாகவோ காணப்படு கின்றன; இன்னமும் முதல்வினையடியிலிருந்து ஆக்கம் பெற்ற தொழிற்பெயர், வினையாலணையும் பெயர் ஆகியவற்றைத் தொடர்ந்தும் துணைவினைகள் வரப்பெறுகின்றன.

புறா விடு பட்டது
— அடிச்சொல்

இராமன் சொல்ல வைத்தான்
— செயவெனெச்சம்

கண்ணன் வந்து இருக்கிறான்
— செய்து வாய்பாட்டு வினையெச்சம்.

கலா வந்தாள் இல்லை — வினைமுற்று

நீ வரலாம் — தொழிற் பெயர்

இராமன் தான் பார்த்தவனாம் — வினையாலணையும் பெயர்

துணை வினைகள் தமிழ்மொழியில் செயவெனெச்ச வடிவிலும், செய்து வாய்பாட்டு வினையெச்ச வடிவிலும், நிபந்தனை வினை யெச்ச வடிவிலும், பெயரெச்ச வடிவிலும், முற்று வடிவிலும், தொழிற் பெயர் வடிவிலும், வினையாலணையும் பெயர் வடிவிலும், அமையப் பெற்றுள்ளன.

நீ வந்து இருக்க வேண்டாம் — செயவெனெச்சம்

அவன் இழுத்துக் கொண்டு வந்தான்
— செய்து வாய்பாட்டு வினையெச்சம்

சீதா பாடிப் பார்த்தால் தெரியும்
— நிபந்தனை வினையெச்சம்

கடைக்கு வந்திருந்த ராமன்
— பெயரெச்சம்

சீதா பார்த்து விட்டாள்
— முற்று

உனக்குச் சொல்லத் தெரிதல் வேண்டும்
— தொழிற் பெயர்

நான் எழுதிக் கொண்டது என்னவென்றால்
— வினையாலணையும் யெர்

துணை வினைகள் முற்றாகச் செயல்படாத நிலையில் இவை களைத் தொடர்ந்து வேறு வடிவங்கள் வரப் பெறுதல் உண்டு

துணை வினைகள் வினையெச்சமாகச் செயல்படும் நிலையிலும், வினையடிலிருந்து தோற்றம் பெற்ற தொழிற்பெயராகவோ அன்றி வினையாலணையும் பெயராகவோ செயல்படும் நிலையிலும் இவற்றைத் தொடர்ந்து வினைமுற்றுகள் அண்மை உறுப்புக்களாக அமைகின்றன. இவ்வினை முற்றுகள் துணைவினை அல்லது முதல் வினை வகையினவாக அமைகின்றன.

நீ செய்து காட்ட வேண்டும் — துணைவினை
இராமன் பார்த்துக் கொண்டு வந்தான் — முதல்வினை

துணைவினைகள் பெயரெச்சமாக அமையும் நிலையில் இவற்றைத் தொடர்ந்து பெயர்கள் அண்மை உறுப்புக்களாக அமைந்துள்ளன.

அன்புடன் பழகிவரும் கங்கை

சில துணைவினைகள் கூட்டு வாக்கியங்கள் அமையும் நிலையில் வாக்கியத்தினின்றும் நீக்கம் பெறுகின்றன.

நான் பார்த்து இருக்கிறேன் + நான் கேட்டு இருக்கிறேன்.
நான் பார்த்தும் கேட்டும் இருக்கிறேன்.

இங்கு 'இருக்கிறேன்' என்னும் இரு துணைவினைகளில் ஒன்று கூட்டு வாக்கியம் அமையும் நிலையில் நீக்கம் பெற்று விட்டது.

சில துணைவினைகள் வெவ்வேறு பேச்சு வழக்கில் வெவ்வேறு வடிவங்களைத் திரிபு நிலையால் பெற்றுள்ளன.

நீ வரவேண்டும்
நீ வரணும் (வேண்டும் > ணும்)
இராமன் பார்த்து விட்டான்
இராமன் பார்த்துட்டான் (விடு > ட்)
அவள் சொல்வதைக் கேட்டுக்கொண்டு இருக்கிறோம்
அவள் சொல்வதைக் கேட்டுகிட்டு இருக்கிறோம் (கொண்டு > கிட்டு)

சில துணைவினைகள் வேறுபட்ட இலக்கணப் பொருளை உணர்த்துவதன் பொருட்டு அடுக்கி வருகின்றன.

லதா வந்திருந்தாள் — இறந்தகாலச் செயல்முற்று (Past Perfect)
சீதை வந்துகொண்டிருக்கிறாள் நிகழ்காலச் செயல்தொடர்முற்று (Present progressive)
நீ சிரித்துக் கொண்டிருக்க வேண்டாம் — எதிர்மறைநிகழ்காலச் செயல்தொடர்முற்று (Negative present progressive)

முதல்வினைக்கும் துணைவினைக்கும் இடையே அகராதிப் பொருள் உடைய சொற்கள் வர இயலாது எனவும் (S.Agesthialingom, 1980 ; 1–32 P. Kothandaraman, 1980; 59 - 78) அவ்வாறு வருங்கால் வாக்கியம் இலக்கணப் பிழையுடையதாக மாறிவிடும் எனவும் அறிஞர் கூறுவர்.

ஆசிரியர் படித்துவிட்டார்
ஆசிரியர் படித்து இப்போது விட்டார்

எனினும் சில துணைவினைகளுக்கும் முதல்வினைகளுக்கும் இடையே அகராதிப் பொருள் தரும் சொற்கள் வருவதனைத் தமிழ்மொழியின்கண் காண முடிகின்றது.

உன்னால் படிக்க முடியாது
உன்னால் படிக்க இப்போது முடியாது.
உன்னால் செய்ய இயலும்.
உன்னால் செய்ய இன்று இயலும்.

1. 3. துணைவினை வகைகள்

தமிழின்கண் காணப்பெறும் துணைவினைகள் முப்பத்திரண்டனையும் மூன்று வகையினவாகப் பாகுபாடு செய்யமுடியும். அவையாவன :

1. வினைமைத் துணைவினைகள் (Aspectual Auxiliary verbs)
2. வினைப்பொருட் துணைவினைகள் (Model Auxiliary verbs)
3. வினைச்செய்கைத் துணைவினைகள் (Voice Auxiliary verbs)

1. 3. 1. வினைமைத் துணைவினைகள்

வினையின் வேறுபட்ட செய்கைகளைக் குறிக்கும் துணை வினைகள் வினைமைத் துணைவினைகள் எனப்படும்,

தமிழ்மொழியில் 'அடி', 'அருள்', 'ஆச்சு', 'இரு', 'உள்', 'எடு', 'ஒழி', 'காட்டு', 'கொண்டிரு', 'தள்ளு', 'தொலை', 'நேர்', 'பார்', 'போ', 'போடு', 'வரு', 'விடு', என்பன வினைமைத் துணை வினைகளாகச் செயல்படுகின்றன.

வினைமைத் துணைவினைகளில்'அடி','ஆச்சு','நேர்',தவிர்ந்த ஏனைய துணை வினைகள் அனைத்தும் காலம், எண், இடம், பால் காட்டும் உருபுகளை ஏற்று வருகின்றன.

இத்துணைவினைகள் துரிதநிலை (Speedness) மரியாதை (reverential) முழுமை (completive), செயல்முற்று (perfect), உச்ச நிலை (excess) நிந்தனை (contemptive), செய்து காட்டுதல் (demonstrative) செயல் தொடர் (progressive), பொறுமையின்மை (impatience), ஆக்கம் (riddance), தற்செயல் (accidental), முயற்சி (trial) திடம் (defenitive), வழக்கம் (habitual), உறுதிப்பாடு(confir mation) ஆகிய வினைமைகளைச் சுட்டுகின்றன.

முத்து விழுந்தடிச்சு ஓடினான் — துரித நிலை
அமைச்சர் வந்தருளினார் — மரியாதை
நான் சாப்பிட்டாச்சு
ராஜா செத்துப் போனான் — முழுமை
கண்ணன் வந்திருந்தான்
ராமன் வந்துள்ளான் — செயல்முற்று
குமார் உடம்பைப் பிழிந்தெடுத்தான் — உச்சநிலை
ராதை நடந்து காட்டினாள் — செய்துகாட்டுதல்
மாலா வந்துகொண்டிருக்கிறாள் — செயல் தொடர்
அண்ணன் அடிச்சித் தள்ளிட்டான் — பொறுமையின்மை
இராமன் வீட்டைவிட்டுப் போய்த் தொலைந்தான்—நீக்கம்
சேகரைப் பார்க்க நேர்ந்தது — தற்செயல்
உமா எடுத்துப் பார்த்தாள் — முயற்சி
குமரன் உழுது போட்டான் — திடம்
நாங்கள் கேட்டு வருகிறோம் — வழக்கம்
தம்பி பார்த்து விட்டான் — உறுதிப்பாடு.

1. 3. 2 வினைப்பொருட் துணைவினைகள்

பேசுபவரின் மனநிலையின் அடிப்படையில் வினையின் வெவ்வேறு பொருண்மைகளைச் சுட்டும் துணைவினைகள் வினைப்பொருட் துணைவினைகள் எனப்படும்.

தமிழில் 'ஆம்', 'இயலும்', 'இல்', 'கூடும்', 'தகும்', 'தெரியும்', 'மாட்டு', 'முடியும்', 'வேண்டும்', என்பன வினைப்பொருட் துணைவினைகளாகச் செயல்படுகின்றன.

வினைப்பொருட் துணைவினைகளில் 'பாட்டு, 'முடியும்', தவிர்ந்த ஏனைய வினைப்பொருட் துணைவினைகள் அனைத்தும் காலம், எண், இடம், பால் காட்டும் உருபுகளை ஏற்பதில்லை

இவை அமைதி (permission), சாத்தியம் (possibility) எதிர்மறை (negetive), வாய்ப்பு (probability), பொருத்தம் (appropriation), உண்மைநிலை (fact), வேண்டுதல் (obligation) ஆகிய வினைப்பொருட்களைச் சுட்டப் பயன்படுகின்றன.

பாமா வரலாம்	— அனுமதி
என்னால் சாப்பிட இயலும்	
என்னால் பார்க்க முடியும்	— சாத்தியம்
அவன் செய்யவில்லை	
இரவி பார்க்க மாட்டான்	— எதிர்மறை
இன்று மழை வரக்கூடும்	— வாய்ப்பு
இது சொல்லத்தகும்	— பொருத்தம்
எனக்கு ஆடத் தெரியும்.	— உண்மைநிலை
நீ பாட வேண்டும்	— வேண்டுதல்

வினைப் பொருட் துணைவினைகளுள் 'மாட்டு' என்னும் துணைவினை தவிர்ந்த ஏனைய துணைவினைகளுக்கும் அவை வரப்பெறும் வாக்கியத்தின் எழுவாய்களுக்குமிடையே எவ்வித இயைபும் காணப்பெறுவதில்லை.

நீ வரவேண்டும்
நீங்கள் வரவேண்டும்

வினைப்பொருட் துணைவினைகள் பெரும்பான்மையும் கால இடைநிலைகளை ஏற்றுவருவதில்லை யெனினும் எதிர்மறையினை ஏற்றுவருதல் உண்டு.

என்னால் பாட இயலும்
என்னால் பாட இயலாது
நான் பார்க்க முடியும்
நான் பார்க்க முடியாது

வினைப்பொருட் துணைவினைகள் பெரும்பாலும் செயவெனெச்சம் அல்லது தொழிற்பெயரைத் தொடர்ந்து வரப் பெறுகின்றன.

நான் பேச வேண்டும் — செயவெனெச்சம்

நீ வரலாம் — தொழிற்பெயர்

வினைப் பொருட் துணைவினைகளைச் சில இலக்கண மொழியியல் அறிஞர்கள் குறிப்பு வினைகளாகக் கருதுகின்றனர்.

1.3.3 வினைச் செய்கைத் துணைவினைகள்

வினையின் வெவ்வேறு செயல்வகைகளைப் புலப்படுத்தும் துணைவினைகள் வினைச் செய்கைத் துணைவினைகள் எனப்படும்.

தமிழ் மொழியில் 'அடி', 'செய்', 'கொள்', 'படு', 'பண்ணு', 'பெறு', 'வை', என்பன வினைச் செய்கைத் துணைவினைகளாகச் செயல்படுகின்றன.

வினைச்செய்கைத் துணைவினைகள் அனைத்தும் எண், இடம் பால், காலம் காட்டும் உருபுகளை ஏற்று வருகின்றன.

இவ்வினைச்செய்கைத் துணைவினைகளில் 'படு', 'பெறு' என்பன செயப்பாட்டு வினைச் செய்கைத் (Passive Voice) துணை வினைகளாகவும் 'அடி', 'செய்' 'பண்ணு' 'வை', என்பன இயக்கு வினைச்செய்கைத் (Causative Voice) துணை வினையாகவும் 'கொள்' என்பது பிரதிபலிப்பு வினைச்செய்கைத் (reflexive voice) துணைவினையாகவும் செயல் படுகின்றன.

கண்ணன் கொலை செய்யப்படுவான்

பாலு கடிதம் வரப்பெற்றான்

—செயப்பாட்டுத் துணைவினை

ராதையை கண்ணன் இளைப்பாறவைத்தான்

பாடத்தை ஆசிரியர் மறக்கடித்தார்

தம்பி வேடிக்கை பார்க்கச் செய்தான்

கீதா கோயிலிலிருந்து பிரசாதம் வரப் பண்ணினாள்

—இயக்குவினைத் துணைவினைகள்

அண்ணனும் தங்கையும் அடித்துக்கொண்டார்கள்

—பிரதிபலிப்புத் துணைவினை

1.4 துணைவினைகள் அடுக்கி வருதல்

தமிழ்மொழியில் இரண்டு, மூன்று அல்லது நான்கு துணை வினைகள் அடுக்கி வருவதைக் காண முடிகின்றது.

1.4 4 இரண்டு துணைவினைகள் அடுக்கி வருதல்

இரு துணைவினைகள் அடுக்கிவரும் பான்மையில் ஒரு வினைமைத் துணைவினையைத் தொடர்ந்து இன்னொரு வினைமைத்துணைவினை அல்லது ஒரு வினைபொருட் துணை வினை அல்லது ஒரு வினைச்செய்கைத் துணைவினை வரப்பெறுகின்றது.

சேகர் வந்து கொண்டிருக்கிறான்
— வினைமை + வினைமை

பழத்தைப் பறித்துப் பார்க்க வேண்டும்
— வினைமை + வினைப்பொருண்மை

அவன் சாமியை வந்தருளவைத்தான்
— வினைமை + வினைச்செய்கை

வினைப்பொருட் துணைவினையைத் தொடர்ந்து எப்போதும் இன்னொரு வினைப் பொருட் துணைவினையே வருகின்றது.

தான் வர வேண்டியது இல்லை.

ஒரு வினைச்செய்கைத் துணைவினையைத் தொடர்ந்து மற்றொரு வினைச்செய்கைத் துணைவினை அல்லது வினைமைத் துணைவினை அல்லது வினைப்பொருட் துணைவினை வருகின்றது.

மாலா சட்டை போட்டுக் கொள்ளச் செய்தாள்
— வினைச்செய்கை + வினைச்செய்கை

பீடா போட்டுக் கொள்ள நேர்ந்தது
— வினைச்செய்கை + வினைமை

அவன் கொலை செய்யப்படவேண்டும்
— வினைச்செய்கை + வினைப்பொருண்மை

1.4.2. மூன்று துணைவினைகள் அடுக்கி வருதல்

ஒரு வாக்கியத்தில் மூன்று துணைவினைகள் அடுக்கி வருதலும் உண்டு. மூன்று துணைவினைகள் அடுக்கி வரும்பொழுது இறுதியில்

வரும் துணைவினை எப்போதும் வினைப்பொருட் துணைவினைகளாக அமைந்துள்ளது.

நீ சட்டை போட்டுக் கொள்ளச் செய்யவேண்டும்
— வினைச்செய்கை + வினைச்செய்கை
+ வினைப்பொருண்மை

மாலதி பீடா போட்டுக்கொள்ள நேரவில்லை
— வினைச்செய்கை + வினைமை
+ வினைப்பொருண்மை

சாப்பாட்டுக்கு இடம் போட்டுவைக்க வேண்டியதில்லை
— வினைச்செய்கை + வினைப்பொருண்மை
+ வினைப்பொருண்மை

ராஜா இப்போது பார்க்க நேர்ந்து இருக்க வேண்டும்
— வினைமை + வினைமை
+ வினைப்பொருண்மை

அதை நீ செய்து பார்க்க வேண்டியது இல்லை
— வினைமை + வினைப்பொருண்மை
+ வினைப்பொருண்மை

1. 4 3 நான்கு துணைவினைகள் அடுக்கி வருதல்

மிக அரிதாக ஒரு வாக்கியத்தில் நான்கு துணைவினைகள் அடுக்கி வருதலைக் காணமுடிகின்றது.

நீ பார்க்க நேர்ந்து இருக்க வேண்டியது இல்லை
— வினைமை + வினைமை + வினைப்பொருண்மை
+ வினைப்பொருண்மை

நீ சட்டை போட்டுக் கொள்ளச் செய்ய வேண்டியதில்லை
— வினைச்செய்கை + வினைச்செய்கை
+ வினைப்பொருண்மை + வினைப்பொருண்மை

1. 5. முடிவு

மேற்கூறப்பெற்ற செய்திகளினின்றும் சில முடிபுகளாகக் கொடுக்கப்படுகின்றன.

தம் அகராதிப் பொருளை இழந்த இலக்கணப் பொருளை உணர்த்தும் வினைவடிவங்களே துணைவினைகளாகும்.

இத்துணைவினைகள் எப்போதும் முதல் வினைகளுக்குப் பின்னிடத்தனவாக அமைந்துள்ளன.

துணைவினைகள் எப்போதும் முதல்வினையை வடிவ நிலையிலும் பொருள்நிலையிலும் சார்ந்து அமைகின்றன. பெரும் பாண்மையான துணைவினைகளுக்கும் முதல்வினைகளுக்கும் இடையே அகராதிப் பொருள் தரும் சொற்கள் வருவதில்லை. எனினும் இவை முதல்வினைகளுக்கும் சில வினைப்பொருள் துணைவினைகளுக்குமிடையே வரப்பெறுகின்றன.

துணைவினைகளை அவை உணர்த்தும் இலக்கணப் பொருட் களின் அடிப்படையில் 1. வினைமைத் துணைவினைகள், 2. வினைப் பொருட் துணைவினைகள், 3. வினைச் செய்கைத் துணைவினைகள் என மூன்று வகையினவாகப் பாகுபாடு செய்யலாம்.

துணைவினைகளில் வினைமைத் துணைவினைகள் துரித நிலை, மரியாதை, முழுமை, செயல்முற்று, உச்சநிலை, நிந்தனை, செய்துகாட்டுதல், செயல்தொடர், பொறுமையின்மை, நீக்கம், தற்செயல், முயற்சி, திடம், வழக்கம், உறுதிப்பாடு, என்னும் வினைமை வகைகளையும், வினைப்பொருட் துணைவினைகள் அனுமதி, சேவை, எதிர்மறை, சாத்தியம், வாய்ப்பு, பொருத்தம், வேண்டுதல், விருப்பு என்னும் வினைப்பொருட்களையும், வினைச் செய்கை துணைவினைகள் செயப்பாட்டு வினைச்செய்கை, இயக்கு வினை, வினைச்செய்கை, பிரதிபலிப்பு வினைச்செய்கை என்னும் வினைச்செயல்வகைப் பொருட்களையும் சுட்டுகின்றன.

துணைவினையின் முன்னிடத்தனவாக அமையும் முதல் வினைகள் வடிவ நிலையில் அடிச்சொல்லாகவோ செயவெனெச்ச மாகவோ செய்துவாய்பாட்டு வினையெச்சமாகவோ வினை முற் றாகவோ தொழிற்பெயராகவோ வினையாலணையும் பெயராகவோ காணப்படுகின்றன.

முதல்வினைக்குப் பின்னிடத்தனவாக அமையும் துணை வினைகள் செயவெனெச்ச வடிவிலும், செய்துவாய்பாட்டு வினை யெச்ச வடிவிலும், நிபந்தனை வினையெச்ச வடிவிலும் பெயரெச்ச வடிவிலும், முற்று வடிவிலும், தொழிற் பெயர் வடிவிலும், வினையா லணையும் பெயர் வடிவிலும் அமையப் பெற்றுள்ளன.

துணைவினைகள் வினையெச்சமாகச் செயல்படும் நிலையில் அவற்றைத் தொடர்ந்து வினைமுற்றுகள் அண்மை உறுப்புகளாக அமைகின்றன துணைவினைகள் பெயரெச்சமாக அமையும் நிலை யில் அவற்றைத் தொடர்ந்து பெயர்கள் அண்மை உறுப்புகளாக அமைந்துள்ளன,

இரண்டு, மூன்று அல்லது நான்கு துணைவினைகள் அடுக்கி வருதலையும் தமிழ் மொழியின்கண் காண முடிகின்றது.

துணைவினைகளில் காணப்பெறும் சில பிரச்சினைகளும் இவண் முடிவுகளாகத் தரப்படுகின்றன.

தமிழ்மொழியின்கண் காணப்பெறும் வினைப்பொருட் துணை வினைகள் பெரும்பான்மையும் முதல் வினைகளாகச் செயல்படும் பொழுதும் துணைவினைகளாகச் செயல்படும்பொழுதும் அவற்றிடையே பொருள் நிலையில் எவ்வித வேறுபாடும் காணப் பெறவில்லை.

இன்று வகுப்பு இல்லை — முதல் வினை
நான் பார்க்கவில்லை — துணைவினை
இன்று வேலை முடியும் — முதல்வினை
நாளை பார்க்க முடியும் — துணைவினை
எனக்குப் பணம் வேண்டும் — முதல் வினை
நீ வரவேண்டும் — துணைவினை

மேற்கூறிய எடுத்துக்காட்டுகளில் 'இல்லை' என்னும் வடிவம் எதிர்மறைப் பொருளையும் 'முடியும்' என்னும் வடிவம் வாய்ப்புப் பொருளையும், 'வேண்டும்' என்னும் வடிவம் வேண்டுதல் அல்லது விருப்பப் பொருளையும் குறிக்கின்றன. பொருள் நிலையில் இவை முதல்வினைகளாகவும் துணைவினைகளாகவும் செயல்படுங்கால் எவ்வித வேறுபாடும் காணப்படவில்லை.

ஈண்டுக் கொடுக்கப்பெற்ற சான்றுகளினின்றும் இவ்வினைகள் முதல்வினைகளிலிருந்து வேறுபட்டவைகளாக அமையவில்லை என்பது தெரிய வருகின்றது.

தமிழில் முதல்வினைக்கும் 'ஆம்', 'மாட்டு', 'கூடும்', 'தகும்', என்னும் வினைப்பொருட் துணைவினைகளைத் தவிர்த்த ஏனைய வினைப்பொருட் துணைவினைக்கும் இடையே அகராதிப் பொருள் தரும் சொற்கள் வருவதனைக் காண முடிகின்றது.

என்னால் பாட இப்போது முடியாது
உன்னால் பார்க்க இப்போது இயலும்
ராமனால் வர இன்று இயலும

இவ்வாறு துணைவினைகளுக்குரிய அடிப்படைப் பண்புகளினின்

றும் முரண்பட்டு வரும் இவ்வினைகளைத் துணைவினைகள் என்று கொள்ளவியலாது.

துணைவினைகள் என்பன தத்தம் பொருளிலிருந்து வேறுபட்டு இலக்கணப்பொருளை உணர்த்தும் முதல் வினைகளாகும். இந்நிலையில் தமிழில் 'கொண்டு', 'இருந்து', என்னும் செல்லுருபுகள் முதல்வினைகளாகச் செயல்படும்பொழுது குறிக்கும் பொருளிலிருந்து வேறுபட்டு, வேற்றுமைப் பொருளெனும் இலக்கணப் பொருளைச் சுட்டுவதற்குப் பயன் படுத்தப்பட்டுள்ளன.

கத்தி கொண்டு வெட்டினான்
வீட்டிலிருந்து வந்தான்

இவ்வாறு அகராதிப் பொருளை இழந்து இலக்கணப் பொருளைச் சுட்டும் வடிவங்களையும் துணைவினைகள் என்று ஏன் கருதுதல் கூடாது ?

இவ்வடிவங்கள் பெயர்களைத் தொடர்ந்து வருவதால் இவற்றைத் துணைவினைகளாக அறிஞர்கள் கருதுவதில்லை. ஆயினும் இவை துணைவினையின் அடிப்படைப் பண்பினைப் பெற்று வருவதால் துணைவினைகள் என்று கொள்வதே சிறப்புடைத்து இது மேலும் ஆராய்தற்குரியது.

துணைநூற் பட்டியல்

1. Agesthialingom, S. 1974
"A Note on itu ceyal ventum",
Seminar on Grammatical Theories in Tamil-I,
Annamalai University, Annamalainagar.
pp. 331-356.

2 Agesthialingom, S. & Srinivasa Varma, G. (Edrs.) 1980
Auxiliaries in Dravidian,
Annamalai University,
Annamalainagar.

3. Andronov, N. 1969
A Standard Grammar of Modern and Classical Tamil,
New Century Book House Ltd,,
Madras.

4. Annamalai, E. 1982
"Dynamics of Verbal Extension in Tamil,
IJDL, Vol. 11; 1. pp. 22-169.

5. Arden, A. M., 1942
A progressive Grammar of the Tamil Language,
Christian Literature Society,
Madras.

6. Caldwell, R. 1956
A Comparative Grammar of the
Dravidian Language,
Reprinted by the University of Madras.

7. Israel, M. 1976
Illakkana Ayvu-Vinaiccol Cintamani Veliyitu,
Madurai

8. Joseph, N. 1981
" Perfect Aspect in Tamil "
Ayvukkovai, 13:2, pp. 339-342.

9. Meenakshi, K. 1978
"Auxiliary Verbs in Tamil and Marathi"
Ayvukkovai, 10:2, pp. 283-284.

10. Meenakshi Sundaram, T. P. 1975
History of Language,
Deccan Col[ege, Poona.

11. Pope, G. U. 1911
A Hand Book of the Ordinary Dialect of the
Tamil Language,
Oxford University Press,
London.

12. Pushpavalli, K. 1976
"Tamil Tunai Vinaikal,"
Ayvukkovai, 8:2, pp. 720-725.

சங்க நூல்களில் கரந்தை

பி. எல். சாமி, I. A S.

சங்க நூல்களில் கரந்தை என்றொரு செடி கூறப்பட்டுள்ளது.

"நாகுமுலை யன்ன நறும்பூங் கரந்தை
விரகறி யாளர் மரபிற் சூட்ட
நிரையிவட் டந்து ஒழுகலாகிய
வெண்வேல் விடலை யின்மையிற் புலம்பி"—புறம்261

இந்த பாட்டில் "நாகினது முலை போன்று நறிய பூவையுடை கரந்தையை அறிவுடையோர் சூட்டு முறைமையிலே" என்று உரை கூறப்பட்டுள்ளது. இதற்கு கூறிய அடிக்குறிப்பில் உ. வே. சுவாமிநாதைய்யர் "கரந்தையாவது தன்னுறு தொழிலா நிரை மீட்டோர் பூச்சூடுதலிற் பெற்ற பெயராதலின் வெட்சித் திணை

(முன் பக்கத் தொடர்ச்சி)

13. Srinivasan, R. 1977
'Auxiliary Verbs in Sangam Literature',
Ayvukkovai, 9:2. pp. 136-141.

14. Tolkappiyar. 1981
Tolkappiyam-Eluttatikaram,
Ilampuranar Urai,
Kalaka veliyitu,
Madras.

1980
Tolkappiyam-collatikaram,
Cenavaraiyar urai,
Kalaka veliyitu,
Madras.

1977
Tolkappiyam-Porulatikaram
Ilampuranar urai,
Kalaka veliyitu, Madras.

போல ஒழுக்கமன்று ; அந்தோ வெந்தை யென்னும் புறப்பாட்டி னுக்கு நாகுமுலையன்ன நறும்பூங்கரந்தை, விரகறியாளர் மரபிற் சூட்ட, நிறையிவட்டந்து என்றவாறு காண்க' என்று தொன்று தொல்காப்பியப் புறத்திணைச் சூத்திரத்திற்கு நச்சினார்க்கினியர் கூறிய உரையை எடுத்துக்காட்டியுள்ளார். கரந்தையென்ற செடியை பற்றிக் கூறியுள்ள பிற பாடல்களையும் பார்ப்போம்.

''கரந்தை நீடிய வறிந்து மாறு செருவிற்
பல்லா னினநிரை தழீஇய வியலார்'' —புறம் 269

கரந்தை் உழும் வயலில் விளையும் ஒரு செடியாகக் கூறப் பட்டுள்ளது. கரந்தை ஒருவகைப் புதர்ப் பூ ; இப்பூவாற் றொடுத்த மாலை நிரை மீட்டோர் சூடுவது மரபு என்று உ. வே. சாமிநாதய்யர் அடிக்குறிப்பில் கூறியுள்ளார்.

''இரும்பனை யன்ன பெருங்கை யானை
கரந்தையஞ் செறுவிற் பெயர்க்கும்'' —புறம் 340

அந்த பாடலின் அடிக்குறிப்பில் கரந்தை ஒரு வகை பூடு. செறு— வயல் உ. வே. சாமிநாதய்யர் கூறியுள்ளார்

''பழனப் பைஞ்சாய் கொழுதிக் கழனிக்
கரந்தையஞ் செறுவின் வெண்குருகு கோப்பு"
அகம் 226

''நறுவரை மஞ்ச னீர்ப்புறம் பொலிய
வம்புகொண் டறுத்த வார்நா ருரிவையிற்
செம்பூங் கரந்தை புனைந்த கண்ணி'' —அகம் 269

இந்த அகநானூற்றுப் பாடல்களில் கரந்தைச் செடியே கூறப்பட்டுள் ளது. திணை கூறப்படவில்லை.

''கரந்தை யலரக் கவர்ந்த வினநிரைகள்
கள்விலை யாட்டி நல் வேய்தெரி கானவன்
—சிலப்பதிகாரம் மதுரைக் காஞ்சி வரி 17-18

சிலப்பதிகார ஊர்காண் காதையில் வரும் 'மறத்துறை முற்றிய மன்னவன் கோயிலும்' என்ற வரிக்கு உரையெழுதிய அடியார்க்கு நல்லார் மறமும் துறைகளும் விளங்குதற்குக் காரணமாகிய மன்னவன் கோயிலும் என்று கூறி அதன் துறையான ஏழு வகையில் வெட்சி கரந்தை முதலிய திணைகளைக் கூறியுள்ளார். இங்கு செடி கூறப்படவில்லை. குறிஞ்சிப் பாட்டில்

''கரந்தை குளவி கடிகமும் கலிமாத்
தில்லை பாலை கல்லிவர் முல்லை –76-77

என்று திணையையே முதற்பொருளான நிலத்தையோ பின்பற்றாது கரந்தைச் செடி கூறப்பட்டது. கரந்தை மருதத்தில் வயலில் காணப்படுவதாகும். குளவி குறிஞ்சியில் காணப்படுவதாகும். தில்லை நெய்தலில் காணப்படுவது. பாலை வெயில் சான்ற நிலத்தில் காணப்படுவதாகும். முல்லைக் காடும் அது சார்ந்த நிலத்தில் காணப்படுவதாகும். ஆதலின் குறிஞ்சிப் பாட்டில் கூறிய கரந்தையையும், குளவியையும், தில்லையும் முல்லையும் இயற்கைக்கு ஒவ்வாதது திணை முறைக்குப் பொருத்த மற்றதாகும்.

''கரந்தையஞ் செறுவிற் றுணைதுறந்து களவன்
வள்ளை மென்கா லறுக்கு மூரன்-ஐங்குறுநூறு -26

குறிப்புரையில் உ. வே. சாமிநாதய்யர் கரந்தையின் செறுவில் கொட்டை கரந்தையை உடைய வயலில் கொட்டைக்கரந்தை வயலில் தோன்றுவதொரு பூடு. கொட்டாங் கரந்தையெனவும் வழங்கும் என்று எழுதியுள்ளார்.

''காய்த்த கரந்தை மாக்கொடி விளைவயல்
வந்திறை கொண்டன்று தானை யந்தீற்
—பதிற்றுப்பத்து 40 வரி 5–6

காய்த்த கரந்தையின் பெரிய கொடியின் வயலில் படை வந்து தங்கியது என்று கூறப்பட்டுள்ளது.

இதுகாறும் கூறப்பட்ட சங்க நூற் செய்திகளில் இருந்து கரந்தை என்பது ஒரு பூண்டு என்பது தெரிகின்றது. விளைவயலில் வளரும் என்பது தெரிகின்றது. இதன் பூ சிவப்பாகவும் நறுமணமுடையதாகவும் தெரிகின்றது. இந்தச்செடி இன்று கொட்டாங் கரந்தை என்று தமிழில் வழங்கப்படுகின்றது. இதன் பூ கொட்டை போன்று கருஞ்சிவப்பாக இருக்கும் என்று Colonel Heber Druny என்று இருக்குமென்றும் அறிவியல் அறிஞர் கூறுவர். இது நெல் விளையும் நிலத்தில் கரையில் காணபபடும் என்று (Subglobular, Purplisz red) என்ற அறிஞர் Hand book of the Indian Flora என்பதில் எழுதியிருக்கிறார்.

கரந்தையில் இரண்டு வகை உண்டு என்று கூறுவர். ஒன்று சிவப்புப் பூவும் மற்றொன்று வெள்ளைப் பூவும் உடையதாகக் கூறுவர். சிவப்பு பூவடையதை நாறு கரந்தையென்றும் விஷ்ணு கரந்தை என்றும் அழைக்கப்பட்டது. இந்த கரந்தைச் செடிகளில் கொட்டைக்

பாவேந்தரின் இளைஞர் இலக்கியம்

டாக்டர். இராம. சுப்பிரமணியன், எம். ஏ., எம். லிட். எஸ்ஸி.,
பி. எச். டி , பி. எல்.
7, தீத்தாரப்ப முதலி தெரு, திருவல்லிக்கேணி,
சென்னை 600-005.

முன்னுரை

பாவேந்தரின் நடை அவருடைய உள்ளம்போலவே, வேகம் மிகுந்தது; பொருள் விளங்காத அருஞ்சொற்கள் அவருடைய பாடல்களில் இல்லை; எல்லாம், பலரும் வழங்கும் எளிய சொற்களே! அச்சொற்களுக்கு அவர் ஊட்டும் வேகத்தையும் ஆற்றலையும் என்ன என்பது! எதையுமே உள்ளத்து உணர்ச்சி இல்லாமல் சொல்ல அறியாதவர்! அவர்! எதையாவது வெறுத்தால், மிகக் கடுமையாக வெறுத்துத் தள்ளுவார்; பழித்தால் மிகக் கடுமையாகப் பழிப்பார்; அவருடைய தாக்குதல், வாள்

(முன் பக்கத் தொடர்ச்சி)

கரந்தை விஷ்ணுகரந்தை என்றும் அழைக்கப்பட்டது. இதை Spaeranta Indicus or Hinthur என்று அழைத்தனர். சிவ கரந்தை நறுகரந்தையெனப்பட்டது. இதை Spaerantium Teylanica என்று அழைக்கப்பட்டது. மணமுடையது. இதை East Indian Thistle என்றும் கொட்டை கரந்தை என்றும் அழைத்தனர். கன்னடத்தில் Karanda gida என்று அழைக்கப்பட்டது. ஆதலீல் இந்த இரண்டு வகைக் கரந்தையின் பூவும் நறுமணமுடையதாகவும் கொட்டையைப் போன்ற உருண்டை வடிவமுடைய நாகின் முலை போலப் பூவுடையதாகவும் கருதப்பட்டதாகத் தெரிகின்றது. இதை கரந்தைப் பூக்கள் இன்றும் சிவனுக்குரிய பூவான காரணத்தால் காரைக்கால் பகுதியில் கோயில் நந்தவனங்களில் வளர்க்கப் படுவதை பார்த்திருக்கின்றேன். ஆனால் இப்போது விஷ்ணு கரந்தையும் சிவகரந்தையும் வழிபாட்டில் முக்கியமாகக் கருதப் படுவதாகத் தெரியவில்லை. இந்த இரண்டு கரந்தையையும் சேர்த்தே கரந்தை என்ற பெயர் சங்க நூல்களில் வழங்கியதாகத் தெரிகின்றது. கரந்தைத் தமிழ்ச் சங்கம் தமிழ்ப்பொழில் என்ற இதழைக் கொண்டு வருவதால் கரந்தை என்பது பண்டைய தமிழ் நூல்களில் எது என்பதையே தெரிவிக்க இக்கட்டுரை எழுதப்பட்டது.

வீச்சைவிடக் கடுமையானது. இவ்வளவு வேகமும் கடுமையும் ஆற்றலும் நிரம்பிய பாடல்கள், பழைய மரபாக வந்த எளிய விருத்தங்கள். அல்லது, எளிய சிந்துமெட்டுகள்; அல்லது சிறுசிறு கண்ணிகள். எளிய பாட்டு வடிவங்களை இவ்வளவு வேகமான உணர்ச்சிகளுக்குப் பயன்படுத்திய அவருடைய திறன் போற்றத் தக்கது.

குழந்தைகளுக்காக எழுதிய பாடல்களும் ஒரு சிறந்த இலக்கிய வகையைச் சேர்ந்ததுதான் என்பதைப் பாரதியாரும், கவிமணியும் அண்மைக் காலத்தில் நிலைநாட்டி விட்டார்கள். அவர்களின் அடியொற்றிப் புரட்சிக் கவிஞரும் அவ்வப்பொழுது குழந்தைகளுக் காக எழுதினார் என்பது அனைவருக்கும் தெரிந்தாகும்.

கவிஞருடைய பாடல்களில் தமிழ் மணமும், அறிவியல் மணமும் கமழ்கின்றன. எளிய சொற்களால் குழந்தையுள்ளத்தைக் கவர்ந்து விடுகிறார். பின்னாளில் மிளிற வேண்டிய பண்புகளை அந்த இளைஞர்தம் உள்ளத்தில் வித்தாகப் பதிக்கின்றார். எதையும் சுவையோடு வழங்குகின்ற சிறப்பினைப் பெற்றிருக்கின்றார். பாடலின் கருத்தும், கருத்துச் சுட்டுகின்ற உண்மையும், உண்மை யின் அழகும் இனிய சந்தத்தோடு சேர்த்து எளிய முறையில் நெஞ்சில் பதிய வைக்கும் தனித் திறமையும் உடையதாகக் கவிஞரின் பாடல்கள் அமைந்திருக்கின்றன.

பாவேந்தர் அவர்களின் முன்னுரை

"ஐந்தாண்டுடைய சிறுவர் சிறுமியர் முதல் பல்கலைக் கழக மாணவர் வரைக்குமுள்ள எவர்க்கும் இந் நூலிற் பாடல்கள் கிடைக்கும்.

இளைஞர் இலக்கியம் என்று பெயரிட்டு இதை நான் எழுதத் துணிந்தமைக்குக் காரணம், பிழைச்சொல்லின்றி மாணவர் பாட்டுக் கற்க வேண்டும் என்பதாகும்.

இதில் உள்ள பாடல்களில் அருஞ்சொற்கள் காணப்படலாம். ஒவ்வொரு பாட்டாலும் மாணவர் இரண்டோர் அருஞ்சொற்க ளேனும் அறிந்து கொள்ளாராயின் 'பாட்டினால் ஏற்படும் பயன் தான் என்ன ?' என்று கேட்கின்றேன் !

ஆங்கிலம் முதலிய பிற சொல்லால் வழங்கும் பொருளை ஏற்ற தமிழ் சொல்லாலேயே குறித்திருக்கின்றேன். படிப்பார் நினைவிற் கொண்டு பயன் அடையட்டும் என்று !

உரைநடையால் ஒரு பொருளை விளக்குவதினும் பாட்டாற் காட்டுங்கால் இனிது பதியும் என்ற உண்மைக்கு இந்நூல் ஒத்து வருகின்றதா என்பதைப் படிப்பார் ஆய்ந்து பார்த்து, ஆம் எனில் கொள்ளுக."

இது ஆசிரியர் தம் நூலின் முன்னுரையில் குறிப்பிடுவது ஆகும்.

இந்நூல் ஒன்பது தலைப்பு வரிசைகளைக்கொண்டதாக அமைந்துள்ளது.

1.	தமிழ்	9 பாடல்கள்.
2.	இயற்கை	34 பாடல்கள்,
3.	அறிவு	26 பாடல்கள்.
4.	ஊர்தி	15 பாடல்கள்.
5.	தொழில்	14 பாடல்கள்.
6.	உயிர்கள்	14 பாடல்கள்.
7.	தாலாட்டும் துயிலெழுப்பும்	7 பாடல்கள்.
8.	சிரிப்பு	5 பாடல்கள்.
9	சிறுகதைப் பாட்டு	9 பாடல்கள்.

இறுதியாக 'வாழ்க' என்னும் பாடலுடன் நிறைவு பெறுகின்றது இந்நூல்.

தமிழ் வாழ்த்து

தமிழ்த் தாயினை வாழ்த்துகின்றார் கவிஞர். அமிழ்தே, அன்பே, கனியே என்று போற்றுகின்றார். தமிழர் வாழ்வில் அகவாழ்வாக அமைந்த அழகே வாழ்க! என்று வாழ்த்துகின்றார்,

மூவேந்தர் மடியினில் பிறந்து வளர்ந்து உலகறியப் பரவிய தமிழே வாழ்க! சிறந்த வாழ்வினைப் பெற்றாய்! வீரம் மணக்கும் புறவாழ்விலும் ஈர நெஞ்சினைப் புலப்படுத்துகின்றாய்!

வீரம் தந்தாய் மேன்மை வகுத்தாய்
ஈர நெஞ்சே இன்பம் என்றாய்!

தமிழின் பெருமையினை இகழ்ந்த கனக, விசயர் இருவரையும் வெற்றி கொண்டனர் தமிழ் மன்னர்.

" வாழ்க எங்கோ! மாதவி மடந்தை
கானற் பாணி கனக விசயர்தம்
முடித்தலை நெரித்தது, முதுநீர் ஞாலம்
அடிப்படுத்து ஆண்ட அரசே வாழ்க!"

(சிலம். 27 : 49–52)

என்று மாடலன் வாழ்த்துகின்றான்.

அதனையே புரட்சிக்கவிஞர் தன் 'தமிழ் வாழ்த்து' வில்

"குமரி நாட்டில் தூக்கிய கொடியை
இமையத் தலைமேல் ஏறச் செய்தாய்!
தமிழைத் தனித்த புகழில் நட்டாய்
தமிழின் பகைவர் நெஞ்சைச் சுட்டாய்!

என்று கூறுகின்றார். தமிழினைப் பழித்த பகைவனின் நெஞ்சினைச் சுட்டாய் என்று நயம்படக் கூறுகின்றார்.

உலக மொழிகளுக்கெல்லாம் மூத்தவளே! முதலாகத் தத்துவத்தை உணர்த்தினாய்! இலக்கியம் இலக்கணம் வைத்தாய்!

மொழியில் சிறந்தது தமிழ் என்றும் பாரில் சிறந்தவன் தமிழன் என்னும் பெருமையினை வழங்கிய தமிழே வாழ்க!

ஊரில் தமிழன் மார்பைத் தட்டிப்
பாரில் தமிழன் நானே என்னும்
சீரைத் தந்த தமிழே வாழ்க!
ஓரா உலகின் ஒளியே வாழ்க!

என்று கவிஞர் வாழ்த்துகின்றார்.

தமிழ்மொழி—தமிழ்நாடு

நாம் பேசும் மொழி தமிழ். நாம் அனைவரும் தழிழர். நமது நாடு தமிழ்நாடு. நாம் விரும்பிக் கற்பது தமிழ்.

காம்பில் மணக்கும் மல்லிகை
காதில் மணக்கும் தமிழ்மொழி

என்று தமது தமிழ்க் காதலையும், ஈடுபாட்டையும் வெளியிடுகின்றார் பாவேந்தர்.

தமிழ்நாடு ஒன்று படுக!

தமிழே எங்கள் உயிரில் அமிழ்தைச் சேர்த்தாய்! நீ வாழ்க!

முத்தமிழ் அன்னாய் முழுதும் நாங்கள்
ஒத்து வாழ்ந்தால் உனக்கும் நல்லது
செத்துக் கிடக்கும் எமக்கும் நல்லது

என்று தமிழ் இளைஞர் இசைக்க வேண்டும் என்று பாவேந்தர் விரும்புகிறார். இளைஞர்கள் இசைக்க வேண்டும் ; - அது பயனில் மூப்பினராகிய பெரியோர் நெஞ்சைத் தொடவேண்டும்.

மூன்றாம் பிறை

கவிதை நுட்பமும் திட்பமும் வண்ணமும் வடிவமும் ஆசையும் அழகும் உடையது. பெரியவர்களுக்குக் கவிதை எழுதுவது எளிய செயல். குழந்தைகளுக்குப் பால் போல் தெளிவாக இருக்கவேண்டும். அதில் கலப்பில்லாத இன்சுவையும் இருக்க வேண்டும்; குழந்தையின் உள்ளத்தைக் கெடுக்காததாகவும் இருக்க வேண்டும். குழந்தைகளுக்கு கூறவேண்டியவற்றை ஆராய்ந்து பார்த்துக் கூறவேண்டும்; தேவையானவற்றைக் கூறவேண்டும்; அதுவும் குழந்தையின் உள்ளத்தில் பதியும்படி சொல்லவேண்டும். கவிதை வடிப்பவர்கள் தாமும் குழந்தையாகி நின்றால்தான் குழந்தைகளுக்கென்று கவிதை எழுத முடியும்.

இயற்கை வருணனையில் கவிஞர் கைதேர்ந்தவர். இயற்கையின் ஒவ்வொரு பொருளையும் குழந்தைகள் பாடி மகிழும்படி இனிதாகப் பாடியுள்ளார். மூன்றாம்பிறை கண்ட அனுபவத்தை ஒரு மழலைச் செல்வம் சொல்லுகிறது.

முல்லைக் காட்டின் அடைசல்—ஒரு
முல்லை யரும்பு தெரிந்ததே
வில்லேதான் மூன் றாம்பிறை—அது
விண்ணில் அதோதான் தெரிந்ததே
சொல்லிச் சொல்லிக் காட்டினேன
தொலைவில் விரலை நீட்டினேன்
இல்லை இல்லை என்றாரே—பின்
இதோ இதோ என்றுரைத்தாரே !

குழந்தை உள்ளம் பேசுகிறது; தெளிவாகப் பேசுகின்றது.

வானொலி

வானொலியில் பிறமொழிப் பாடல்களே மிகுதியாகக் கேட்கின்றனவாம்.

ஏன் ஒலி செய்தார் செந்தமிழ் நாட்டில்
இன்னொரு மொழியில் அமைந்த பாட்டை ?

என்று கேட்கிறார். ஏனெனில்,

குலுங்கும் அரும்பும் செந்தமிழ் நாட்டில்
குளிர்ந்த செந்தமிழ் கேட்டு மலரும்!

இதைக்கேட்டு நம் நெஞ்சம் குளிர்கிறது; மலர்கிறது.

மழை

இயற்கை வழங்கும் செல்வம் மழை. மழை வளம் கரப்பின் அனைத்து உயிர்களுமே துன்புறும். வையத்தை வாழ வைக்கும் மழையினைக் கவிஞர் வருக! வருக!! என்று அழைப்பு விடுப்பது குழந்தைகளுக்கு மழையின் பெருமையினை எடுத்துக்கூறுவதாக அமைகின்றது.

வானத்தி லேபிறந்த மழையே வா - இந்த
வையத்தை வாழவைக்க மழையே வா
சீனிக்கரும்பு தர மழையே வா - நல்ல
செந்நெல் செழிப்பாக்க மழையே வா
கானல் தணிக்க நல்ல மழையே வா—நல்ல
காடு செழிக்கவைக்க மழையே வா
ஆன கிணறுகுளம் ஏரிஎல்லாம்—நீர்
அழகுப டுத்தநல்ல மழையே வா

என்று அழைக்கின்ற வரிகளிலே மழையின் பெருமையினை இளைஞர் உலகம் உணரும்படி செய்கின்றார் கவிஞர்.

கடல்

என்றும் முழங்கும் கடல்; மெத்தக் கப்பல் தோணி மிதக்கும் கடல்; பறவைகள் மெல்லப்பாடி மீன் உண்ணுகின்றன; நல்ல மழையினை வழங்குகின்றாய்! கோடையில் நல்ல காற்றினையும் தருகின்றாய்! எல்லையில்லாத பெருங்கடலே நீ வாழ்க!

மாய வித்தைகள் பல காட்டிடும் மாலைப் போதிலே மக்களுக்கு இன்பம் வழங்குகின்றாய். உழைக்கும் இனத்தவர் கதிரவன் வரவின்போது பண்ணிசைத்துப் பாடுகின்றார்!

முத்துக் கடலே வாழ்க—இசை
முழங்கும் கடலே வாழ்க!

தத்தும் அலைகள் கரையை—வந்து
தாவும் கடலே வாழ்க!
மெத்தக் கப்பல் தோணி—மேல்
மிதக்கும் கடலே வாழ்க!
ஒத்துப் பறவைகள் பாடி—மீன்
உண்ணும் கடலே வாழ்க!
வண்ணம் பாடிப் பொழியும் நல்ல
மழையும் உன்னால் அன்றோ!
தண்என் றுவரும் காற்றை—நீ
தந்தாய் கடலே வாழ்க!
கண்ணிற் கடங்க வில்லை—நான்
காணும் போதுன் பரப்பு!
மண்ணிற் பெரிதாம் கடலே—நீ
வாழ்க! வாழ்க!! வாழ்க!!!
நீலக் கடலே வாழ்க—ஒளி
நெளியும் கடலே வாழ்க!
மாலைப் போதில் கடலே—வரும்
மக்கட் கின்பம் தருவாய்!
காலைப் போதில் கதிரோன்—தலை
காட்டும் கடலே வாழ்க!
ஏலேலோப் பண் ணுலே—வலை
இழுப்பார் பாடும் கடலே!

என்று கடலினைப் பாடுகின்றார் இயற்கைக் கவிஞர்—பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள்.

தோப்பு

ஒரு குறிப்பிட்ட இனத்தைச் சார்ந்த மரங்கள் மிகுதியாக உள்ள இடத்தை அதன் பெயர் கொண்டு சுட்டுகின்றோம்.

மாந் தோப்பு, தென்னந் தோப்பு, கமுகந் தோப்பு, புளியந் தோப்பு போன்ற அனைத்துத் தோப்புக்களுக்கும் விளக்கம் கொடுக்கின்றார் கவிஞர்.

எல்லாம் மாமரங்கள்—அதில்
எங்கும் மாமரங்கள்
இல்லை மற்ற மரங்கள்
இதுதான் மாந்தோப்பு.

என்று மாந்தோப்பின் சிறப்பினைப் பாடுகின்றார் கவிஞர். இது போன்று மற்ற தோப்புகளையும் சிறப்பித்துக் கூறுகின்றார்.

நேர்பட ஒழுகு

பாவேந்தர் அவர்கள் குழந்தைகள் வாயிலாக அனைவரும் தூய்மையாக இருக்க வேண்டும்; நோய்களுக்கு இடம் கொடுக்க லாகாது என்பன போன்ற கருத்துக்களைக் கூறுகின்றார். இவ் வரிய சுகாதாரக் கருத்துக்களைக் கொண்ட பாடலைப் பாருங்கள் :

கண்டஇ டத்திலே துப்பாதே
காலிலே சேற்றை அப்பாதே
துண்டு, துணிகளைக் கிழிக்காதே
துடுக்கால் எவரையும் பழிக்காதே
பண்டம்எ தையும்பா ழாக்காதே
பாலைத்த ரையிலே வார்க்காதே
நொண்டியைக் கண்டு சிரிக்காதே
நொளநொளப் பழத்தை உரிக்காதே

இளைஞர் தம் உள்ளத்தில் படுமாறு சிறந்த கருத்துக்களைப் புரட்சிக் கவிஞர் கூறுவதைக் காணலாம்.

மாணவர்களுக்குச் சிறந்த அறிவுரைகளைக் கூறுகின்றார் கவிஞர்.

பள்ளியில் எவரையும் ஏசாதே
மண், ஓடு, ஆணி, துணி கடிக்காதே-கேள்
மற்றவர் பொருளைநீ எடுக்காதே!
அழகாய் இருந்திடும் உன் சுவடி – அதை
அழுக்கா காமல எடுத்துப்படி.

குழந்தைக்கு அறிவுரை ஆத்திச்சூடி போலப் பலபட அமை கிறது : கவிஞர் துணிவு மிக்கவர், துணிவுள்ள நல்ல குழந்தைகள் வளர வேண்டும் என்று விரும்புகின்றவர். அதனால்தான்,

கொடியவர்கள் தாக்கவந்தால
தடியினைத் தூக்கு, வெறுங்
கோழைகளை ஏழைகளை
வாழவைப்பாய் நீ!

என்று ஊக்குகிறார்.

உடைந்திடக் கூடாது நெஞ்சம்—நீ
உண்மைக்குப் பாடுபடும் போதில்!
அடைந்ததைக் காப்பாற்ற வேண்டும்—நீ
அயல்பொருள் பறிக்கஎண் ணாதே!

என்று உண்மை பேசும் பொழுது நெஞ்சுக்கு உறுதிவேண்டும் என்று கூறுகின்றார்.

வாரம்

தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் பள்ளிச் சிறார்களுக்கு ஒன்று, இரண்டு என்ற எண்களையும், கிழமை, வாரம், திங்கள், திசை முதலியனவும் நினைவில் வைத்துக் கொள்ள எளிய பாடல்களைக் கூறுவது வழக்கம். இப்பள்ளி ஆசிரியர்கள் பாவேந்தர் பாடியுள்ள எண், கிழமை, திசை, திங்கள், எழுத்து பற்றிய பாடல்களைக் கூறித் தமிழ் உணர்ச்சி பெருகச் செய்யவேண்டும். வான ஊர்தி, மாட்டு வண்டி, புகை வண்டி, பரிசல், மிதிவண்டி, லாரி, பஸ், கப்பல் முதலியன பற்றிப் பாடியுள்ள மிக எளிய பாடல்களைப் பாவேந்தர் இயற்றியுள்ளார். அவைகளைப் போற்றி ஆசிரியர்கள் இளஞ்சிறார்களுக்குக் கூறல் வேண்டும். கவிஞரின் சில பாடல் களைக் காண்போம்.

வாரமுதல் நாள் ஞாயிறு
மங்கா மறுநாள் திங்கள்
சேரக் கௌவும் செவ்வாய்
சேர்ந்து வருமாம் ஓர்புதன்
பாராய் அதன்பின் வியாழன்
பளிச்சென் றடிக்கும் வெள்ளி
நேரில் மறுநாள் ஓர்சனி
நிறைந்த வார நாள்ஏழாம்.

திசை

பாவேந்தர் திசைகளைப் பற்றிய பாடல் சிறப்புடையது ஆகும்.

கதிர் முளைப்பது கிழக்கு — அதன்
எதிர் இருப்பது மேற்கு
முதிர் இமயம் வடக்கு — அதன்
எதிர் குமரி தெற்கு

என்று ஆதவன் தோன்றுவது கிழக்கு; அதன் எதிரில் இருப்பது மேற்கு; வடக்கே இருப்பது இமயம்; தெற்கில் இருப்பது குமரி என்று திசைகளைப் பற்றி விவரிக்கிறார்.

கொல்லர்

இரும்பைக் காய்ச்சி உருக்கிடு வீரே!
யந்திரங்கள் வகுத்திடு வீரே!

என்ற தேசியக் கவி பாரதியின் வாக்கினை நினைவுபடுத்துகின்றார் கவிஞர்.

இரும்பே இல்லாவிட்டால்—இங்
கென்ன வேலை நடக்கும்?
கரும்பு வெட்டும் கொடுவாள்—பெருங்
காடு வெட்டும் கத்தி
திரும்பு கின்ற பக்கம் எங்கும்
தெரியும் பொருள்கள் எல்லாம்
இரும்பு கொண்ட பொருள்கள்—அவை
விரும்பத் தக்க பொருள்கள்

இரும்புக்குப் பாவேந்தர் பாடும் புகழ் இது.

கதிரவன்

கதிர்களை உடைய கதிரவனைப் புதிய பிடரிமயிர் சிலிர்த்த சிங்கமாகவும், மாணிக்கக் குன்றாகவும், மங்காத தணல்பிழம்பாகவும் காலியான தங்கத் தட்டாகவும், பெருவிளக்காகவும் உருவகித்துக் காட்டுகின்றார் கவிஞர்.

தங்கத் தட்டே வாவா—ஒரு
தனித்த அழகே வாவா
பொங்கும் சுடரே வாவா—பசும்
பொன்னின் ஒளியே வாவா
எங்கும் இருப்பாய் வாவா—நீ
எவர்க்கும் உறவே வாவா
சிங்கப் பிடரைப் போலே—பிடர்
சிலிர்த்த கதிரே வாவா

பெண்கள் தலையில் வைத்துக் கொள்ளும் உச்சிவில்லைக்கு ஓடையில் பூத்த தாமரையை உவமை கூறுகின்றார்.

ஓடைத்தா மரைபோல் — தலை
உச்சி வில்லை செய்வார்

மலையில் பெரும்பாலும் விளைவது பலாப்பழம், மலையில் வாழும் யானையின் தலை அப்பழத்திற்கு உவமையாவது பொருத்தம்.

வெம்பும் யானைத் தலைபோல
வேரிற் பழுத்த நல்லபலா

என்று கவிஞர் பலாப் பழத்திற்கு யானையின் தலையினை உவமையாக்குகின்றார்.

காக்கையைக் கருங்கொட்டாப்புளியென்று கூறுகின்றார்.

கொல்லையில் காக்கைகருங் கொட்டாப்புளி

கோடை

கோடையின் கொடுமையினைச் சுட்டிக் கூறுகின்றார் கவிஞர். கொட்டிய சருகைப் பொரித்த அப்பளமாக்கும் தன்மை உடையதாக இருந்தது என்று குறிப்பிடுகின்றார்.

கொட்டிய சருகு பொரித்த அப்பளம்

காக்கை

காக்கையினைப் பற்றிப் பாடாத புலவர்களே இல்லை எனலாம். வள்ளுவர் குறளில் "காக்கைகரவாக் கரைந்துண்ணும், ஆக்கமும் அன்ன நீரார்க்கே உள". பாரதியார் அவர்கள் "காக்கை குருவிகள் எங்கள் ஜாதி-கூட்டம்". மனிதர்கள் காக்கையின் வாயிலாகப் பகிர்ந்துண்ணும் நல்ல நீதிமானை அறியலாம். புரட்சிக் கவிஞர் காக்கையைப் பற்றிய பாடலைப் பாருங்கள்.

ஓயாத நாக்கா ?
ஓய்ந்திருப்பாய் காக்கா
வாயில் என்ன பாக்கா ?
வாழைக் கச்சை மூக்கா ?
ஆயா வைத்த தட்டை
அதிலிருக்கும் பிட்டை
நீ பண்ணாதே சட்டை
நினைக்காதே திருட்டை.

சிறுகதைப் பாட்டு

பல உயிரினங்களையும் பற்றிய சின்னஞ்சிறிய பாட்டுக்கள் நிறைய உள்ளன. பெருமாள் மாடு தலையை அசைப்பதும் துரத்தி வருவதும் மிக நயமாகப் பாட்டாகியுள்ளன.

அறிவுரைகள் அடங்கிய கதை பொதி பாட்டுக்கள் மிகச்சிறப்பாக உள்ளன. ஒரு காக்கை, ஓர் எறும்பு, ஓர் எருமை ஆகிய மூன்றையும் கொண்டு அமைந்த கதை.

பெருமை பேசித் திரிந்திடுவார்
அது சரியில்லை
பின்னால் சிறுமையடையக்கூடும்
அது பெருந்தொல்லை

என்னும் அறிவுரையை வழங்குகின்றது. இவ்வாறு பல நல்ல— சிறந்த பாடல்கள் நூலின் சிறப்பினை உயர்த்தி நிற்கின்றது.

வாழ்க !

தமிழ் வாழ்த்தில் தொடங்கிய நூல்

தமிழ் மொழி வாழ்க !
தமிழர் வாழ்க !
நமது தாய்நாடு
நற்றமிழ் நாடு!
தமிழரின் கலைகள்
தமிழர் நாகரிகம்
தமிழர் பண்பாடு
தழைத்துவா ழியவே !

என்னும் இசையுடன் நிறைவு பெறுகிறது, தமிழ்—தமிழர்—தமிழ்நாடு இவை கவிஞரின் உள்ளத்தை ஆட்கொண்டு கிடப்பது போன்று இளைஞர் உள்ளத்தையும் ஆளவேண்டும் என்பது அவர்தம் பேரவா. அதன் விளைவுதான் "**இளைஞர் இலக்கியம்**" என்ற நூலாகும்.

கவிஞர் தம் ஆசிரிய முன்னுரையில் கூறியுள்ளதுபோலவே,—
"ஐந்தாண்டுடைய சிறுவர் சிறுமியர் முதல் பல்கலைக் கழக மாணவர் வரைக்கும் உள்ள எவர்க்கும் இந்நூலிற் பாடல்கள் கிடைக்கும் !

தமிழ்ப் பொழில்

பதிப்பாசிரியர் குழு

1. திரு. ச. இராமநாதன், அவர்கள்
தலைவர், கரந்தைத் தமிழ்ச் சங்கம்.

2. திரு. கி. சந்திரமோகன், பி. ஏ., பி. எல்., அவர்கள்
செயலாளர், கரந்தைத் தமிழ்ச் சங்கம்.

3. திரு புலவர் க. வெள்ளைவாரணனார் அவர்கள்
பேராசிரியர், தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.

4. திரு. டாக்டர் சி. பாலசுப்பிரமணியன், எம். ஏ., எம். லிட்., பி. எச். டி., அவர்கள்
தமிழ்த் துறைத் தலைவர், சென்னைப் பல்கலைக்கழகம்.

5. திரு. டாக்டர் தமிழண்ணல், எம் ஏ., பி. எச். டி., அவர்கள்
தமிழ்ப் பேராசிரியர், மதுரை காமராசர் பல்கலைக் கழகம்.

6. திரு. சிலப்பொலி சு. செல்லப்பன், எம். ஏ., அவர்கள்
தமிழ் வளர்ச்சித் துறை, இயக்குநர், சென்னை.

7. திரு புலவர் பி. விருத்தாசலம், எம். ஏ., அவர்கள்
முதல்வர், கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர்-2.

8. திரு. பேராசிரியர், புலவர் ச. பாலசுந்தரம் அவர்கள்
367, மேல அரச வீதி, தஞ்சாவூர்.

9. திரு. புலவர் சி. கோவிந்தராசனார் அவர்கள்
பேராசிரியர், மதுரை காமராசர் பல்கலைக் கழகம்.

10. திரு. புலவர் மீனா. இராமதாசு, எம். ஏ., அவர்கள்
உமாமகேசுவரா மேல் நிலைப்பள்ளி, தஞ்சாவூர்-2.

தமிழ்த்தாய் வாழ்க

கரந்தைத் தமிழ்ச் சங்கம்

தமிழ்ப் பொழிலின் கையொப்பம்

			உள் நாடு		வெளி நாடு
1.	ஆண்டு வரி	...	20—00	...	030—00
2.	தனி இதழ்	...	02—00		
3.	ஆயுள் வரி	...	250—00	...	250—00

—: சங்க உறுப்பினர்கள் :—

திங்கள் வரி	...	000—25
ஆண்டு வரி	...	003—00
ஆயுள் வரி	...	100—00

Regd No. TN/TJ/17.

உ

தமிழ் வாழ்க

தமிழ்ப்பொழில்

கரந்தைத் தமிழ்ச்சங்கத் திங்கள் வெளியீடு

எண் :

திரு. ....

அவர்கள்

கரந்தைத் தமிழ்ச் சங்கம்,
தஞ்சாவூர்-613 002.

விற்பனைக்குக் கிடைக்கும் நூல்கள்

நெல்லை வருக்கக் கோவை	0—12
சித்திரந்தாதி	0—12
சுருதி வீணை	0—25
கவியரசு நினைவுமலர்	1—00
சிவமும் செந்தமிழும்	0—25
Garland of Tamil Poetry	2—00
கச்சிக் கலம்பகம்—(பூண்டி அரங்கநாத முதலியார்)	0—50
தமிழரசி குறவஞ்சி	0—62
யாழ் நூல்—சுவாமி விபுலானந்தர்	50—00
கட்டுரைப்பொழில் (மணிவிழா மலர்)	30—00
மெய்ஞ்ஞானத்தின்—கொலுவிருக்கையில் அஞ்ஞானத்தின் வழக்கீடு (இரண்டாம் பதிப்பு)	2—00
நக்கீரர்—ந. மு. வேங்கடசாமி நாட்டார் (இரண்டாம் பதிப்பு)	3—00
கபிலர் ,, ,,	4—00
பிற வெளியீடுகள் :	
கலைக்கூத்தன் கவிதைகள்	6—00

வெளியிடுபவர் : திரு. ச. இராமநாதன், தலைவர், கரந்தைத் தமிழ்ச்சங்கம், கருந்திட்டைக்குடி, தஞ்சாவூர்-613 002.
அச்சிடுபவர் : திரு. M. சந்திரமௌலி,
ஜெமினி அச்சகம், 1837/1, மேல ராஜ வீதி, தஞ்சாவூர்-613 009.